விலை ரூபா: 5.00 பக்கங்கள்:-பத்து Registered as a News paper in Sri Lanka

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம் நாவாந்துறைப் படிப்பகம்

# வலம்புரி
# VALAMPURI

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம் கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 ஐப்பசி08 வெள்ளிக்கிழமை (25.10.2002) தொலைபேசி~ 2223378 ஒலி 310

## அமைச்சர் கரு ஜயசூரியா தலைமையில் தேசிய அரசாங்கம் அமைக்க முயற்சி?

### கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பரபரப்பு

(கொழும்பு)

எரிபொருள் மின்சக்தி அமைசசர் கருஜயசூரிய தலைமையில் தேசிய அரசொன்றை அமைப்பதற்கான முயற்சியில் ஆளும்கட்சி, எதிர்க்கட்சி முக்கியஸ்தர்கள் முயற்சி எடுத்து வருவதாக கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பரபரப்பாக பேசிக் கொள்ளப்படுகிறது.

19வது அரசியல் அமைப்பு சீர்திருத்த சட்டமூலத்திற்கு உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பை அடுத்து எழுந்துள்ள சிக்கல் மிகுந்த சூழ்நிலையிலும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிகளின் பாராளுமன்ற பகிஷ்கரிப்பை சாதகமாக கொண்டும் இத்தகைக முயற்சியில் இவர்கள் ஈடுபட்டுள்ளார்கள்.

இதே வேளை நுகேகொடையில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொதுஜன ஐக்கிய முன்னணியின் கூட்டம் ஒன்றில் அனுரா பண்டார நாயக்க உரையாற்றிய போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா பாராளுமன்றத்தை கலைக்க சிபார்சு செய்தாலும் ஜனாதிபதி அவ்வாறு கலைக்க மாட்டார் என்றும் பதிலாக தேசிய அரசொன்றை அமைக்க முயற்சிப்பார் என்றும் தெரிவித்திருநதமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ம)

## இஸ்ரேல் குழு கொழும்பு வருகை

(கொழும்பு)

இலங்கை விமானப் படைக்குச் சொந்தமான இஸ்ரேலியத் தயாரிப்பான கிபிர் குண்டு வீச்சு விமானம் விழுந்து நொருங்கிய சம்பவத்தை விசாரணை செய்வதற்கு மூவர் அடங்கிய இஸ்ரேலிய நிபுணர்குழுவொன்று நேற்று கொழும்பு வந்து சேர்ந்துள்ளது.

நேற்றுக் கொழும்பு வந்து சேர்ந்த மூவர் அடங்கிய இஸ்ரேலிய நிபுணர்குழு கட்டுநாயக்காவுக்குச் சென்று கிபிர் குண்டு வீச்சு விமானம் தரித்து நின்ற இடத்தையும், விமானம் விழுந்து

(10ம் பக்கம் பார்க்க)

### ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்க முன்வாருங்கள்

# தேசிய அரசாங்கத்தை அமைக்க சகலரும் ஒத்துழைக்க வேண்டும்

### நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் ஜனாதிபதி



(நமது நிருபர்)

**இலங்கையின் இனப்பிரச்சினைக்கு இந் நாட்டில் வாழ்கின்ற சகல இன மக்களும் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வொன்றையே நாம்காண வேண்டும் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா நேற்று இரவு நாட்டு மக்களுக்கு உரையாற்றும் போது அறைகூவல் விடுத்துள்ளார்.**

19வது அரசியல் சீர்திருத்தச் சட்ட மூலத்திற்கு உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பையடுத்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தொலைக்காட்சி மூலம் நேற்று இரவு நாட்டு மக்களுக்கு உரையாற்றினார்.

அவர் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் தொடர்ந்து கூறியதாவது, இலங்கையின் அரசியல வரலாற்றில் தொடர்ந்து 44 வருடமாக இலங்கையில் உள்ள இரண்டு பெரும்பான்மை இனக்கட்சிகளும் எந்தவொரு பிரச்சினையிலும் புரிந்துணர்வுடன் ஒன்று பட்டு செயற்பட்டதாகத் தெரியவில்லை. ஆனால் கடந்த பொதுத் தேர்தலின் போது இரண்டு பெரும்பான்மைக் கட்சிகளும் புரிந்துணர்வுடன் செயற்பட வேண்டும் என மக்கள் ஆணை வழங்கியுள்ளனர்.

எனினும் பொதுத் தேர்தல் நடந்து முடிந்து 11மாதம் சென்றபோதும் நடந்ததுஎன்ன என்று ஜனாதிபதி

(10ம் பக்கம் பார்க்க)

## புளொட் உறுப்பினர். பரு. நீதிமன்றில் ஆஜர்

(மந்திகை)

புளொட் அமைப்பின் உறுப்பினர் ஜெயச்சந்திரன் (ஜெயா மாஸ்ரர்) நேற்று பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

நெல்லியடிப் பகுதியில் 1999ம் ஆண்டு கோரமான முறையில் இளைஞர் ஒருவர் கொலை செய்யப் பட்டிருந்தார்.

(10ம் பக்கம் பார்க்க)



(நமது நிருபர்)

**இலங்கையின் இனப்பிரச்சினைக்கு இந் நாட்டில் வாழ்கின்ற சகல இன மக்களும் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வொன்றையே நாம்காண வேண்டும் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா நேற்று இரவு நாட்டு மக்களுக்கு உரையாற்றும் போது அறைகூவல் விடுத்துள்ளார்.**

19வது அரசியல் சீர்திருத்தச் சட்ட மூலத்திற்கு உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பையடுத்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தொலைக்காட்சி மூலம் நேற்று இரவு நாட்டு மக்களுக்கு உரையாற்றினார்.

அவர் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் தொடர்ந்து கூறியதாவது, இலங்கையின் அரசியல வரலாற்றில் தொடர்ந்து 44 வருடமாக இலங்கையில் உள்ள இரண்டு பெரும்பான்மை இனக்கட்சிகளும் எந்தவொரு பிரச்சினையிலும் புரிந்துணர்வுடன் ஒன்று பட்டு செயற்பட்டதாகத் தெரியவில்லை. ஆனால் கடந்த பொதுத் தேர்தலின் போது இரண்டு பெரும்பான்மைக் கட்சிகளும் புரிந்துணர்வுடன் செயற்பட வேண்டும் என மக்கள் ஆணை வழங்கியுள்ளனர்.

எனினும் பொதுத் தேர்தல் நடந்து முடிந்து 11மாதம் சென்றபோதும் நடந்ததுஎன்ன என்று ஜனாதிபதி

(10ம் பக்கம் பார்க்க)

## புளொட் உறுப்பினர். பரு. நீதிமன்றில் ஆஜர்

(மந்திகை)

புளொட் அமைப்பின் உறுப்பினர் ஜெயச்சந்திரன் (ஜெயா மாஸ்ரர்) நேற்று பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

நெல்லியடிப் பகுதியில் 1999ம் ஆண்டு கோரமான முறையில் இளைஞர் ஒருவர் கொலை செய்யப் பட்டிருந்தார்.

(10ம் பக்கம் பார்க்க)

# அரசமைக்க ஜனாதிபதி அழைப்பு விடுத்தால் அதனைஏற்க பொ.ஐ.முன்னணி தயார்

## எதிர்க் கட்சித் தலைவர் மகிந்த தெரிவிப்பு

(கொழும்பு) ,

ஜனாதிபதியின் கரங்களைப் பலப்படுத்துவதன் மூலம் அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு மக்கள் அணிதிரள வேண்டு மென்று எதிர்க் கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ நேற்று முன் தினம் நுகேகொடையில் நடைபெற்ற பாராளுமன்ற கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்..

அவர் மேலும் பேசுகையில்; அரசாங்கத்தை அமைக்க ஜனாதிபதி அழைப்பு விடுக்கும் எந்நேரத்திலும் அதனை ஏற்றுக் கொள்வதற்கு பொ.ஐ.மு தயாராக இருக்கிறது. ஜே.ஆர். ஜயவர்த்தனாவின் அரசியற் சட்டம் கொடுத்த அத்தனை அதிகாரங்களும் ஜனாதிபதியிடம் உள்ளன.அரசாங்கம் மக்களுக்கு பாதகமான எந்த நடவடிக்கையை எடுத்தாலும் அதனை தடுக்க அவரால முடியும் என்று கூறினார்.

இதேவேளை இக் கூட்டத்தில்

(10ம் பக்கம் பார்க்க)

# வடக்கிற்கும் - கிழக்கிற்கும் தனித்தனி சமாதான செயலணிக் குழு தேவை

## அமைச்சர் ஹக்கிம் கோரிக்கை

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாணங்களில் அமைக்கப்பட இருக்கும் சமாதான செயலணியின் கீழ் வடக்கிற்கு ஒன்றும், கிழக்கிற்கு ஒன்றுமாக செய்றபடத்தக்க இருபிரிவுகள் ஏற்படுத்தப்படல் வேண்டும் என்று முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் ரவூப்ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இரு மாகாணங்களிலும் உள்ள இன விகிதாசார அடிப்படையிலும் பரந்த இந்த பிர்தேசங்களில் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளின் அடிப்படையை கருத்திற் கொண்டும் செயலணியின் கடமைகள் செயலணிப்பிரிவுகளுக்கு பகிர்ந்தளிக்கப்படல் வேண்டும்.

அந்த ஏற்பாடுஏற்றுக் கொள்ளப் படாத நிலையில் முஸ்லீம்களிடமிருந்து கூட்டுச்செயலணிக்கான

(10ம் பக்கம் பார்க்க)

# 5 அம்சக் கோரிக்கைகள் பிரதமருக்கு அனுப்பி வைப்பு

(கொழும்பு)

பாராளுமன்ற அமர்வுகளைப் புறக்கணித்து வரும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ்ஸின் 9 உறுப்பினர்களும் தங்களின் கோரிக்கைகளை கட்சியின் அதியுயர் பீடத்திற்கு சமர்ப்பிக்கவுள்ளனர்.

இவ்வுறுப்பினர்களின்சார்பாக வன்னிப் புனரமைப்பு அமைச்சர் நூர்தீன் மசூர் விளக்கம் அளிக்கையில் தங்கள் கேரிக்கைகளை எழுத்து மூலம் சமர்ப்பிக்கவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தமது 5 கோரிக்கைகளைக் கொண்ட கடிதங்கள் நேற்று முன்தினம் பிரதமர் ரணில்

(10ம் பக்கம் பார்க்க)

# பேரியலின் தே.ஐ.முன்னணியும் பாராளுமன்றை பகிஷ்கரிக்கும்

(கொழும்பு)

முஸ்லிம் மக்களுக்கு தனி அலகு கோரிப் பாராளுமன்றப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ள சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எம்பிகளுக்கு ஆதரவு தெரிவித்து பேரியல் அஷ்ரப் தலைமையிலான தேசிய ஐக்கிய முன்னணி(நு.அ) இன்று முதல் பாராளுமன்ற பகிஷ்கரிப்பில் ஈடுபடவுள்ளது.

பாராளுமன்ற அமர்வுகளைப் பகிஷ்கரித்து வரும் முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்கள் 9 பேருக்கும் ஆதரவு தெரிவித்து தேசிய ஐக்கிய .முன்னணி எம்பிக்களான திருமதி பேரியல் அஷ்ரப், இஸ்ர்தீன், ஹிஸ்புல்லா ஆகிய மூவருமே இன்று முதல் பாராளுமன்றத்தைப் பகிஷ்கரிக்கவுள்ளனர். (ம)

## பரீட்சை நிலையம் மாற்றம்

(யாழ்ப்பாணம்)

நாளை நடைபெறவுள்ள வடக்குக் கிழக்கு மாகாண காணி நிர்வாகத் திணைக்களத்தின் வெளிக்களப் போதனாசிரியர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை நிலையங்கள் மாற்றப்பட்டுள்ளதாக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கம் அறிவித்துள்ளார்.

இதன்படி வேம்படி மகளிர்

(10ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## விபத்தில் மூவர் காயம்

(யாழ்ப்பாணம்)

வீதியைக் கடக்க முற்பட்ட நபரை மோட்டார் சைக்கிள் மோதிய சம்பவத்தில் காயமடைந்த மூவர் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்

செவ்வாய் இரவு புறாப்பொறுக்கியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் மோட்டார் சைக்கிளில் வந்தவர்களான நெல்லியடியைச் சேர்ந்த யேசெப் அல்வின் (வயது 33), சரசாலை தெற்கைச் சேர்ந்த மு ஜெயரூபன் (வயது 24) மற்றும் வீதியைக் கடக்க முற்பட்டவரான கரணவாய் மேற்கைச் சேர்ந்த எம் தர்மலிங்கம் ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.

(உ-23)

## பஸ் சேவை இல்லை

### பயணிகள் சிரமம்

(அச்சுவேலி)

கொடிகாமம்-கச்சாய் வீதிக்கான பஸ் சேவை இன்மையால்,இப்பகுதிக்கு செல்லும் பயணிகள் சுமார் 2 மைல் தூரம் நடந்து செல்லும் அவல நிலை ஏற்பட்டுள்ளது

கடந்த 1995 ஆம் ஆண்டுக்கு முன்னர்,வடபிராந்திய போக்குவரத்துச்சபையினால், இப்பகுதிக்கான போக்குவரத்துச் சேவை நடைபெற்று வந்தபோதும் இராணுவ நடவடிக்கை காரணமாக, பின்னர் இச்சேவை இடைநிறுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

(உ-14)

# தென்மராட்சிப் பகுதியில் மிதிவெடி அகற்றியநிலம் நேற்று ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலகத்துடன் இணைந்து அமெரிக்காவின் றொங்கோ மிதிவெடி அகற்றும் குழு தென்மராட்சிப் பகுதியில் மிதிவெடி அகற்றிய நிலத்தைக் கையளிக்கும் வைபவம் நேற்றையதினம் மு.ப 10மணியளவில் சரசாலை சனசமூகநிலையத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் தென்மராட்சி பிரதேசசெயலர் எஸ். ஸ்ரீநிவாசன் மற்றும் இராணுவ அதிகாரிகள், பொதுஅமைப்புகளின் பிரதிநிதிகள் சர்வதேச தொண்டர் நிறுவனங்களின் உறுப்பினர்கள் உட்பட பெருமளவு மக்கள் கலந்து கொண்டனர்.

நேற்றைய கையளிப்பு வைபவம் குறித்து யாழ்மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலகம் அறிக்கை ஒன்றினையும் வெளியிட்டுள்ளது அதில் குறிப்பிட்டிருப்பதாவது.

யாழ்மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலகத்துடன் (DISTRICT MINE ACTION OFFICE) றொங்கோ (RONGO) மிதிவெடி அகற்றும் குழு இணைந்து முதலாவது மிதிவெடி அகற்றிய பிரதேசத்தினை யாழ் மாவட்டத்தில் வசிக்கின்ற மக்களுக்கு கையளித்தது இக்கையளிப்பு வைபவமானது அக்டோபர் மாதம்24ம்திகதி வியாழக்கிழமை காலை10மணிக்கு சரசாலை சனசமூகநிலையத்தில் நடைபெற்றது

அமெரிக்காவின் நிறுவனமான றொங்கோகுழுவானது மொசாம்பிக்கில் இருந்து வருகைதந்த செயற்பாட்டாளர்களால் நிர்வகிக்கப்படுகின்றது இவர்கள் சரசாலை கிராமத்தின் சுற்றுப்புறத்தில் காணப்படும் இருவேறுமிதிவெடி பிரதேசத்தை நன்கு பயிற்றப்பட்ட நாய்கள் மூலம் இனங்கண்டனர் இவர்கள் இவ்முறையைக்கையாண்டுசரசாலைவடக்கில் 75,000ச.மீ பரப்பிலிருந்து 989 மிதிவெடிகள், வெடி பொருட்களை அகற்றியுள்ளனர்.

மற்றும் சரசாலை தெற்கில் 20,000ச.மீபரப்பில்121 மிதிவெடிகள், வெடிபொருட்களை அகற்றியுள்ளனர் றொங்கோ குழு மிதிவெடி அகற்றும் பணியை சரசரலை கிராமத்தில் மே மாதம் 2002ம்ஆண்டு தொடங்கி அக்டோபர் மாதம் முழுமையாகவும், பாதுகாப்பாகவும்இத்திட்டத்தை நிறைவேற்றியுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் மிதிவெடி சம்பவங்கள் அங்கு வாழும் மக்களுக்குஒருபெரும் அச்சுறுத்தலாக விளங்குகின்றன புலம்பெயர்ந்த மக்கள் இருப்பதற்கு ஒருநிலம்தேவை என்பதால் மிதிவெடி அபாயம் உள்ள இடங்கள்என்று கூட சிந்திக்காமல் தென்மராட்சி பிரதேசத்தில் மீளகுடியேறுகிறார்கள் இதன் விளைவாக பல மிதிவெடிசம்பவங்களுக்கு உட்படுகிறார்கள்.

ஆகவேகண்ணிவெடி வயல்களை அகற்ற வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதோடு அங்குவாழும் மக்களுக்கு மிதிவெடி பற்றிய அறிவை வழங்க வேண்டியுள்ளது. தென்மராட்சியில் 2002ஆம் ஆண்டுஆரம்பத்தில் இருந்து இன்றுவரை 44வெவ்வேறு வெடிச்சம்பவங்களில்54 பாதிப்புக்கள்ஏற்பட்டுள்ளன.

இலங்கை இராணுவமும் தமிழீழ விடுதலைப்புலிகளும் கடந்தகால யுத்தத்தின்போது புதைத்த பெருமளவு மிதிவெடிகளை அகற்றுதலை யாழ்மாவட்ட மிதிவெடிச் செயற்பாடு அலுவலகம்ஒருங்கிணைத்து உள்ளது. மிதிவெடிகளை அகற்றுதன்மூலம் விவசாயம், வீடமைத்தல் கால்நடைவளர்ப்பு போன்ற தேவைகளை பூர்த்திசெய்ய முடிகிறது என்றுள்ளது.

(உ-6)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

மீள் இணக்கத்திற்கும் சமாதானத்திற்குமான கல்விஎன்னும் தலைப்பிலான்நான்கு நாள் கருத்தரங்கு நாளை சனிக்கிழமை முதல் யாழ் வலயக் கல்வித்திணைக்கள மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கு பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.வேலாயுதம் தலைமையில் பி.பகல்2 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

மலையகத்தைச் சேர்ந்த அரச அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்கள்மற்றும் இலங்கைத்தமிழர்ஆசிரியர் சங்கத்தின் யாழ் மாவட்டஅங்கத்தவர்கள் நிர்வாகிகள்ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இக்கருத்தரங்கில் யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ,பாலசுந்தரம்பிள்ளை உட்பட பலர் கருத்துரைகளைவழங்கவுள்ளனர்.

(த)

## இராசி பலன்

25-10-2002

(ஐப்பசி 8 வெள்ளி)

சதுர்த்தி மு.இ 7 15வரை

ரோகிணி பி.ப 2.37 வரை

இராகுகாலம் 10.02-12.32

நல்லநேரம் 6.02 - 7.32

சங்கடகசதுர்த்தி விரதம்

இரண்டாம் ஐப்பசி வெள்ளி

**மேடம்**

மாதர் நட்பு, காரியஜெயம் தனவிரயம், உடல்சோர்வு.

**இடபம்**

கற்பனை மிகுதி, முயற்சி பலிதம், தெய்வ தரிசனம், பெரியோர் ஆதரவு.

**மிதுனம்**

பிதா சிந்தை, வாக்குபலிதம், பொருள் சேர்க்கை, கோபப்படுதல்.

**கடகம்**

நினைத்தகாரியம் கைகூடும் தெய்வ சிந்தை, தனலாபம், சகோதரர் உதவி.

**சிங்கம்**

நல்லசம்பவம், கீழ்ப்படிவு, முயற்சி கைகூடும், பெரியோர்சந்திப்பு.

**கன்னி**

தொழில் கஷ்டம், பிரயாணம், வயிற்றுக்கோளாறு, மனக்கிலேசம்.

**துலாம்**

வாகன பயம், போசன சுகம், வீண்தொல்லை, காரியதடங்கல்.

**விருச்சிகம்**

கலந்துரையாடல், எதிர்பாராத நன்மை, கௌரவமான நிலை, போசன சுகம்.

**தனுசு**

திடீர் பயணம், நோய் குணமடைதல், காரிய சித்தி தனவரவு.

**மகரம்**

காரிய இடையூறு, கொடுக்கல்வாங்கல் பிணக்கு, குடும்பக்கவலை, கௌரவக் குறைவு.

**கும்பம்**

தன்னம்பிக்கைக் குறைவு, காரியதாமதம், சிறு வியாதி, பெரியோர் மனஸ்தாபம்.

**மீனம்**

கூட்டுமுயற்சி, புதியஆடை அன்னியர் சந்திப்பு, நல்ல சம்பவம்.

(பழைய நேரப்படிகணிப்பிடப்பட்டது)

வளவன்


## வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை

### மானிப்பாய்

### வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்

எமது சபையில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றது கீழ்க்குறித்த கேள்வி வைப்புப் பணத்தையும், கேள்விப் பத்திரக் கட்டணத்தையும் செலுத்தி படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

1. கேள்விபத்திரம் வழங்கப்படும் திகதி- இன்று 25.10.2002 — 30 10.2002 வரை
2. கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி - 31.10.2002 நண்பகல் 12.00 மணி வரை
3. கேள்விகள் திறக்கப்படும் திகதி - 31.10.2002 பி.ப 2.00 மணி வரை (திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்)
4. கேள்விகளை ஏற்கவோ அல்லது மறுக்கவோ கேள்விச்சபைக்கு அதிகாரமுண்டு.
5. கேள்விப்பத்திரத்தை அரக்கு முத்திரையிட்டு பதிவுத் தபாலில் அல்லது தலைமைக் காரியாலயத்திலுள்ள கேள்விப் பெட்டியில் பந்தி 2ல் குறிப்பிட்டபடி கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கவும்.

**அட்டவணை 1**

தளபாட ஒப்பந்தகாரர்களுக்கு மட்டும் (2002 ம் ஆண்டு பதிவு செய்த)

| வேலை விபரம் | கேள்வி வைப்புப் பணம் | கேள்வி பத்திரப் பணம் | வற் 20% |
|---|---|---|---|
| ஆனைக்கோட்டை உதயதாரகை | 500.00 | 200.00 | 40.00 |
| சுதுமலை ஐங்கரன் பாலர் பாடசாலை | 500.00 | 200.00 | 40.00 |
| பெரியவிளான் புனித அந்தோனியார் பாலர் பாடசாலை | 7,25.00 | 250.00 | 50.00 |
| சாவற்கடடு குமுதினி சிறுவர் பாடசாலை | 250.00 | 150.00 | 30.00 |

**அட்டவணை 2**

வீதிகள்/ கட்டடங்கள் வேலைக்கு 2002 ம் ஆண்டு பதிவு செய்த ஒப்பந்தகாரர்களுக்கு மட்டும்.

| | | | |
|---|---|---|---|
| பண்டத்தரிப்பு செபமாலை மாதா பாலர் பாடசாலை தொடர் வேலை | 1500.00 | 300.00 | 60.00 |
| சாந்தை ப.நே. கூ.ச.அபிவிருத்தி சபை கிறவல் வீதி | 725.00 | 250.00 | 50.00 |

வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன்,ஜே. பி. யு. எம்

தலைவர்

பி. விக்டர்

செயலாளர்

வலி தென்மேற்கு பிரதேச சபை,
தலைமை அலுவலகம்
மானிப்பாய்

(கி-5172)


## நாகர்கோவில் நிலைபற்றி ஒஸ்ரினுக்குக் கடிதம்

(கொழும்பு)

நாகர்கோவில் பகுதியில் மீளக்குடியமர்வதற்கு வேண்டிய ஒழுங்குகளை மேற்கொள்ளக்கோரி கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை எஸ். சேனாதிராசா பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின்பெர்னான்டோவுக்கு கடிதம் ஒன்றினை அனுப்பிவைத்துள்ளார்

நாகர்கோவில் மேற்கு மீனவர் கூட்டுறவுச் சபையினரின் வேண்டுகோளுக்கிணங்க எழுதப்பட்டுள்ள அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

மூன்று கிராமசேவகர் பிரிவுகளில் நிரந்தர வசிப்பிடமாகக்கொண்ட நாகர்கோவில் கிராமவாசிகள் நாட்டுப் பிரச்சினையால் இடம்பெயர்ந்து அற்ப வருமானத்துடன் அல்லற்பட்டு அலைந்து வாழ்கின்றனர்.

தற்போது பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள இப்பிரதேசத்தைச் சென்றுபார்த்துவீடுகள், உடைமைகளின் சேதங்களை மதிப்பிடுவதற்கும் மீள்குடியேற்ற ஒழுங்குகளை மேற்கொள்வதற்கும் பிரிவின் உதவி அரசாங்க அதிபர், கிராமசேவையாளர்களுடன் செல்வதற்கு அனுமதியளிக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

இதற்காக அவர்களுடன் நானும் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கே. சிவாஜிலிங்கமும் செல்லவுள்ளோம்.

மக்கள் படும் கஷ்டங்களை கருத்திற்கொண்டு விரைவான மீள்குடியேற்றத்துக்கு தங்களின் ஒத்துழைப்பையும் விரைவான பதிலையும் எதிர்பார்க்கின்றேன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

(உ)

# புலிகளிடம் மட்டுமே தமிழீழ மீண்டும் ஆட்சிபீடமேற்றும் வல்லமை உண்டு

## தீர்க்கமாக உரைக்கிறார் திருமாவளவன்

(தென்மராட்சி)

**தமிழன் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றாதவரை தமிழ் வாழாது-தமிழனும் வாழமாட்டான்.ஆகவே தமிழ்அரசு ஒன்று அமைப்பது தான் ஒரேவழி. ஆட்சி அதிகாரம் மட்டும் தான் தீர்வு எனவே தமிழனுக்கு ஆட்சி தேவை.அந்த ஆட்சி அதிகாரத்தை வெல்லக் கூடிய தகுதி'தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு' மட்டுமே இருக்கிறது.**

தமிழகத்தின் விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் தலைவரும், தமிழக சட்ட மன்ற உறுப்பினருமாகிய இரா.திருமாவளவன் 'உலக அரங்கில் தமிழ்' கருத்தரங்கில் நேற்று முன்தினம் உரையாற்றும் போது இவ்வாறு தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் தமிழ்துறையினால் ஏற்பாடு செய்யப்பட்ட இக்கருத்தரங்கு தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர்.அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் வரவேற்புரையை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி எஸ்.சிவலிங்கராசாவும் தொடக்கவுரையை துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளையும், வாழ்த்துரையை கலைப்பீடாதிபதி. பேராசிரியர் ப.கோபாலகிருஸ்ண ஐயரும் நிகழ்த்தினர்.

இரா.திருமாவளவன் அங்கு தொடர்ந்து பேசுகையில்;

இன்றைக்கு ஒரு இனத்தை ஒருங்கிணைத்து, கட்டமைத்து,இணையான அரசை நடத்துகின்ற வலிமை பெற்ற வீரியமுள்ள ஒரு தமிழனாக வாழ்பவன் ஈழத்தமிழன். தமிழ் இனத்தைக் காப்பாற்ற கூடிய ஆளுமையும், தமிழ் இனத்தை மீட்கக் கூடிய ஆளுமையும் பெற்றவர்கள் விடுதலைப் புலிகளேயாவர்கள்.

### போராடும் நிலையில் நாங்கள்

தமிழைக் காக்க வேண்டும். தமிழைப் பாதுகாக்க வேண்டும் என்று. போராடுகின்ற நிலையில் நாங்கள் உள்ளோம் நடுத்தர வர்க்கத்தைச் சார்ந்த வெள்ளைச் சட்டை போட்ட தமிழர்கள் தமிழைப் பேசுவதை அநாகரிகமாகக் கருதுகிறார்கள். இது உலகெங்குமுள்ள தமிழர்களிடையே நிலவிவருகின்ற ஒரு கேவலமான நிலை.

தமிழகத்திலே நகர்ப்புறங்களில் வாழ்கின்ற தமிழர்கள்-தமிழ்வழிப்பள்ளியிலே படிப்பதற்கு அச்சப்படுகிறார்கள், அவமானமாகக் கருதுகிறார்கள்.

தமிழ் வழியில் படித்தால், தமிழிலே பேசினால், தமிழ்ச் சொற்களைக் கையாண்டால் அவனை இழிவுபடுத்துகிற பழக்கம் தமிழரிடையே வளர்ந்திருக்கிறது.தமிழனும், தமிழனும் சந்தித்துக் கொண்டால் ஆங்கிலத்தில் பேசுவதைப் பெருமையாகக் கருதுகிறார்கள். தமிழ்மொழி வேலைவாய்ப்புக்குப் பயன்படாத மொழியாக இன்றைக்குத் தமிழர்களால் கருதப்படுகின்றது.

### தமிழகத்தின் தமிழின் நிலை?

தமிழ் தமிழகத்திலேயே இன்று ஆட்சி மொழியாக இல்லை. பயிற்சிமொழியாக இல்லை.கலைஞர் தமிழகத்திலே முதலமைச்சராக இருந்த சமயம் 100 தமிழ் அறிஞர்கள் ஒன்று கூடி தமிழை ஆட்சிமொழியாக்கும்படி கோரி அறப்போர் நடத்தினார்கள்.

தமிழ் மண்ணிலே, தமிழர் நாட்டில் தமிழர்கள் ஆளுகிற ஒரு நாட்டில் தமிழ்மொழியை ஆட்சிமொழியாககு, தமிழை பயிற்சி மொழியாக்கு என்று கோரிக்கை வைத்துப் போராட வேண்டிய நிலை ஆனால் இன்றும் தமிழகத்தில் தமிழ் ஆட்சி மொழியாகவில்லை.

தமிழகத்தின் எல்லாதெரு முனைகளிலும் ஆங்கில நர்சரிகள் ஒவ்வொருநாளும் திறக்கப்பட்டுவருகின்றன. தமிழன் தான் திறக்கிறான். தமிழ் மொழியில் பள்ளியை நடத்தக் கூடாது.ஆங்கில நர்சரிப் பள்ளிகளில் தமிழைப்படிக்கக் கூடாது என்று நீதிமன்றில் வழக்குத் தொடுப்பவன் தமிழனாக இருக்கிறான்,

### தமிழன் பேசுவது தமிழா?

தமிழன் கையில ஆட்சி அதிகாரம் இல்லை. தமிழன கையில் அரசு இல்லை. தமிழ் நாட்டில் அரசு இருக்கிறது, அது தமிழனின் அரசு, அலல. அது இநதியனின் அரசு. இந்திய அரசின ஒரு கிளை அரசு, அது தமிழ் நாட்டு அரசு அலல. தமிழன் ஆட்சி அதிகாரத்தை இழந்து பல ஆண்டுகளாகப் போய்விட்டன.

தமிழைக் காப்பாற்ற வேண்டுமானால்- தமிழ் மண்ணைக் காப்பாற்ற வேண்டுமானால் தமிழனின் கையில் ஆட்சி அதிகாரம வேண்டும், தமிழன் இன்று ஆங்கிலத்தில் தான சிநதிக்கின்றான். தமிழில் ஒன்று இரண்டு நிமிடம் பேசினால், பத்து வார்த்தையாவது ஆங்கிலத்தில் வந்து விடும. ஆங்கிலத்தையும் முழுமையாகப் பேசத் தெரியாது: தமிழையும் முழுமையாகப் பேசத் தெரியாது, இரண்டும் கெட்டான் நிலைக்கு மாறிவிட்டானே என்பது தான் வேதனை;

தமிழகத்தில் எடுக்கிற தமிழ்படங்களுக்கு ஆங்கிலப் பெயர் சூட்டுகிறார்கள் . இவற்றுக்கு விடை காண வேண்டிய பொறுப்பு இன்றைக்கு விடுதலைப் புலிகளிடமே இருக்கிறது எனக் குறிப்பிட்டார்.

தலைவரான பேராசிரியர் அ. சண்முகதாஸ் தனது தலைமையுரையில்;

ஒரு மொழி பல நாடுகள் எனற அடிபபடையிலே நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். 24 மணி நேரமும் தமிழ் உலகில் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

நாங்கள் நித்திரை செய்து கொண்டிருக்கும் போது தமிழ் எங்கேயோ பேசிக் கொண்டிருக்கிறது.

நாங்கள் பெருமைப் படத்தக்க வகையில் உலகமெல்லாம் தமிழர்கள் பரவியிருக்கிறார்கள். தமிழ் பேசப்படுகிறது எனக் குறிப்பிட்டார்.

இக்கருத்தரங்கில் காற்றுக் கென்னவேலி இயக்குநர் புகழேந்தி தங்கராசா, ஓவியர் மருது எழுத்தாளர் ப.ஜெயப்பிரகாசம, கவிஞர் இன்குலப் ஆகியோரும் கருத்துக்கள் வழங்கினர். (உ-77)

## ஊழல் குற்றச்சாட்டு முன்னாள் பிரதமர் மீது விரைவில் விசாரணை

(கொழும்பு)

முன்னாள் பிரதமர் ரத்ன சிறி விக்கிரமநாயக்க, இறப்பர் கூட்டுத்தாபனத்தில் 54 கோடிரூபா ஊழல் இடம் பெற்றதாக கூறப்பட்ட குற்றச்சாட்டுத் தொடர்பாக விரைவில் குற்றப்புலனாய்வு பொலிஸாரினால் விசாரிக்கப் படவுள்ளார்.

முன்னாள் திறைசேரிச்செயலாளர் ஜி.பி. ஜயசந்திர குற்றப்புலனாய்வு பொலிஸாரினால்விசாரிக்கப்பட்டபோது, வழங்கிய தகவல்களுக்கமையவே முன்னாள் பிரதமர் விசாரிக்கப்படவுள்ளார். (உ-3)

## உள்ளூராட்சி உதவியாளர்களுக்கு சேவைக்காலப் பயிற்சி

(சுதுமலை)

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களில் கடமை புரியும் உள்ளூராட்சி உதவியாளர்களிறகான 3 நாள் சேவைக் காலப் பயிற்சி எதிர்வரும் நவம்பர் மாதம் 6, 7, 8 ஆம் திகதிகளில் திருகோணமலையில் உள்ள உள்ளூராட்சித் திணைக்களத்தில் நடைபெறவுள்ளது.

உள்ளூராட்சி மன்றங்களில் கடமை புரியும் 68 உள்ளூராட்சி உதவியாளர்க்கும் தனித்தனியே இதற்கான அனுமதிக்கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டத்தில் இருந்து 14 உதவியாளர்கள் மேற்படி சேவைக் காலப் பயிற்சிக்கு செல்லவுள்ளனர். (உ-252(

## அமெரிக்க அமைச்சர் கொழும்பு வந்தார்

(கொழும்பு)

தென்கிழக்காசிய விவகாரங்களுககுப் பொறுப்பான அமெரிக்காவின் பிரதி உதவி வெளிவிவகார அமைச்சர் டொனால்ட் காம்ப் உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டு நேற்று இலங்கை வந்து சேர்ந்தார்.

நாளை வரை இங்கு தங்கவுள்ள டொனால்ட் காம்ப், இரு தரப்பு விவகாரங்கள், பிராந்திய அபிவிருத்தி விடயங்கள குறித்து முககிய தரப்புகளுடன கலந்தாலோசிக்கவுள்ளார்.

இதே வேளை, அரசத் தலைவர்கள், எதிர் கட்சி உறுப்பினர்கள், அரச சார் பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள மற்றும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளையும் இவர் சந்தித்துப் பேசவுள்ளார். (உ)

# இலங்கையின் சமாதானமுயற்சிகள் சரியான திசையில் செல்கின்றன

### நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் திருப்தி

(கொழும்பு)

சமாதான முயற்சிகள் சரியான திசையிலசென்று கொண்டிருக்கின்றன. ஜனாதிபதிக்கும் பிரதமரிற்கும் இடையிலான கருத்துமுரண்பாடுகளோ அன்றி அண்மையில் கிழக்கில் ஏற்பட்ட அசம்பாவிதங்களோ சமாதான முயற்சிகளைப் பாதிக்காது,

நோர்வேபிரதி வெளிவிவகாரஅமைச்சர் விடார்ஹெல்கீசன் நேற்றுமுன்தினம் விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரனை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்திய பின்னர் கருத்து வெளியிடுகையில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் இதுபற்றி மேலும் குறிப்பிடுகையில்; எதிர்வரும் 31 ஆம்திகதி நடைபெறவிருககும் 2 ஆம் கட்டப் பேச்சுவார்த்தைபற்றிய நிகழ்ச்சிநிரல் தயாரிப்பு மற்றுய பல்வேறுவிடயங்கள பற்றியும் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் ஆராயப்பட்டது.

தற்போதைய தருணத்தில் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களிடையே நேரடிப்பேச்சுவார்த்தைகளை நடத்த விடுதலைப்புலிகளின் தலைவர் விருப்பமகொண்டிருக்கவலலைஎனவும்,

இரண்டாம்கட்டப் பேச்சுவார்த்தையில் இதுகுறித்துக் கவனம்செலுத்தப்படும் எனவும் அவர் நமபிச்கைதெரிவித்தார்.

தொடர்ந்து கூறுகையில்;

முன்னைய பேச்சுக்களின் போது இணக்கம் காணப் பட்டவாறு கூட்டுச்செயலணி அமைப்பதுகுறித்து இருதரப்புக்களிலும இருநது சிபார்சுகள் முனவைககபபடவில்லை,

ஆனால், புனர்வாழ்வு நடவடிககைகளிறகாக கூட்டுச் செயலணி அமைப்பதுகுறித்து கவனம் செலுத்தப்பட்டதாக அவர்மேலும குறிப்பிட்டார்.

அடுத்தமாதம் இறுதிப் பகுதியில் வடக்கு-கிழக்கு புனர்வாழ்வு நடவடிக்கைகளிற்காக உதவுவதுபற்றி நோர்வேஅரசு தலைமையிலான அமைச்சரவைக் கூட்டம்ஒன்றைக் கூட்டுவதுபற்றி கவனம்செலுத்தப்படும எனவும் கூறியுளளார். (உ-10)

## காவலர்களைத் தாக்கிவிட்டு தப்பியோடிய மேலும் இரு கைதிகள் அகப்பட்டனர்

(புத்தளம்)

புத்தளம் சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தபோது சிறைக்காவலர்களைத் தாககிவிட்டு தப்பிச் சென்ற மேலும் இரு கைதிகளையும் இவர்களுடன் இணைந்து பல் வேறு கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டு வந்த 6 பேரையும் வென்னப்புவ பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

கடந்த ஓகஸ்ட்மாதம் 8ஆம் திகதி அதிகாலை, காவலில் இருந்த சிறைக் காவலர்களை கடுமையாகத்தாக்கி, சிறைச் சாலையை உடைத்துக் கொண்டு கைதிகள் 6 பேர் தப்பிச் சென்றனர்.

இதற்கு முந்திய தினம் புத்தளம் மாவட்ட நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட இக்கைதிகள்.நீர் கொழும்புபிரதான சிறைச்சாலைக்கு இடம்மாற்றம்செய்வதற்காகவேண்டிதற்காலிகமாக புத்தளம் சிறைச் சாலையில் தடுத்து வைக்கப் பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தப்பியோடிய கைதிகளில் இருவர், ஏற்கனவே பொலிஸாரினால்கைதுசெய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப் பட்ட போது தப்பியோடிய ஏனையசகாக்கள் குறித்து தகவல்களை வெளியிட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து, இரு மோட்டார் சைககிள்கள், 9 துவிச்சக்கர வண்டிகள் 8 தங்கச் சங்கிலிகள், வங்கிகளில் அடகுவைக்கப்பட்டிருந்த ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான நகைகளின் பற்றுச் சீட்டுக்கள், கையடக்கத்தொலைபேசிகள், ஒருகைத்துப்பாக்கி,கைகுண்டு மற்றும் துப்பாக்கி ரவைகள் என்பன வற்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். (உ)

# பயங்கரவாதிகளின் அடுத்த இலக்கு தாய்லாந்தின் புஹுட் உல்லாசத்தளம்

## டென்மார்க் வெளிவிவகார அமைச்சு அறிவிப்பு

(கொபன்ஹகம்)

இந்தோனேசியாவில் கடந்த 12ம் திகதி இடம் பெற்ற குண்டு வெடிப்பையடுத்து தாய்லாந்து பயங்கரவாதிகளின் இலக்காக மாறலாமென்று டென்மார்க் விடுத்த எச்சரிக்கையை தாய்லாந்து நிராகரித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமைப் பதவியைத் தற்போது ஏற்றுள்ள டென்மார்க் அந்த ரீதியிலேயே எச்சரிக்கையை விடுத்துள்ளது.

தாய்லாந்தின் புஹுட் உல்லாசத் தளத்தில் பயங்கரவாதத் தாக்குதல் நடத்த திட்டமிட்டுள்ளமை பற்றிய தகவல் கிடைத்திருப்பதாக டென்மார்க் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

எனினும் இந்த எச்சரிக்கையை புஹுட் உல்லாசத் தளத்தின் தலைவர் நிராகரித்துள்ளதுடன், அங்கு பாதுகாப்பு பலப்படுத்தப் பட்டிருப்பதாகவும், உலகில் அது பாதுகாப்பான தீர்வு எனவும் அவர் உறுதியாகத் தெரிவித்துள்ளார். (சு-4)

# மர்மக்கொலையாளிக்கு எதிராக அமெரிக்காவில் பிரார்த்தனை

(வாஷிங்டன்)

அமெரிக்கத்தலைநகர் வாஷிங்டனை பீதியடையச் செய்யும் மர்மக கொலையாளிக்கு எதிராக அமெரிக்காவில் பிரார்த்தனை நடைபெறவுள்ளது.

வாஷிங்டனிலும்,அதன் சுற்றுப்புறத்திலும் 10 பேரைச் சுட்டுக் கொன்றதுடன் 3 பேரை காயப்படுத்திய கொலை வெறி பிடித்த நபர் பற்றிய பீதி தொடர்வதால் அவ ரின் நடமாட்டத்தை நிறுத்துவதற்கா கவே இப்பிரார்த்தனை செய்யவுள் ளதாக அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யு புஷ் தெரிவித்துள்ளார்.

அத்துடன் அந் நபரைப் பிடிப்பதற்காக அரசாங்க வளங்கள் முழுமையாகப் பயன்படுத்தப்படும் என்று வெள்ளை மாளிகையில் நடை பெற்ற கூட்டமொன்றில் புஷ் எச்சரித்துள்ளார்.

இதேவேளை அமெரிக்காவின் புலனாய்வுப் பிரிவினர் அனைவரும் அந்நபரைத் தேடும் பணியில் ஈடுபட்டுள்ளதாகவும் அவர் விரைவில கைது செய்யப்படுவாரெனவும, மேற்படி கூட்டத்தில் பேசும் போது சமஷ்டிப் புலனாய்வுப் பணியகத்தின் தலைவர் ரொபேட் முல்லர் தெரிவித்துள்ளார். (சு-4)

# சார்க் உச்சி மாநாடு ஜனவரியில் நடைபெறும்

(இஸ்லாமாபாத்)

சார்க் உச்சிமாநாடு எதிர்வரும் ஜனவரி மாதம் 11ஆம் திகதி தொடக் கம் 13ஆம் திகதி வரை நடத்துவ தற்கு பாகிஸ்தான் தீர்மானித்துள் ளது.

பாகிஸ்தானின் இஸ்லாமாபாத் நகரில் உச்சிமாநாடு நடை பெறுமென, அமர்வில் அங்கம் வகிக்கும் 7 நாடுகளுக்கும் பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் தெரிவித் துள்ளார்.

இந்தியா,பாகிஸ்தான்,இலங்கை, பங்களாதேஷ்,பூட்டான்,மாலைதீவு, நேபாளம் ஆகிய 7 நாடுகளுமே சார்க் அமைப்பில் அங்கம் வகிக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (சு-4)

# ஐக்கிய நாடுகளின் தடையுத்தரவை மீறி ஈராக்கிற்கு இராணுவத் தளபாடங்கள் ஏற்றுமதி

(வாஷிங்டன்)

ஐக்கிய நாடுகளின் தடையுத்தரவை மீறும் வகையில் வொஸ் னிய நிறுவனமொன்று யூக்கோஸ் லாவியா நிறுவன மூடாக, ஈராக் கிற்கு இராணுவத் தளபாடங்களை ஏற்றுமதி செய்துள்ளது.

இவ்வாறு ஏற்றுமதி செய்தமைக்கான சான்றுகள் இருப்பதாக நேட்டோ கூறியுள்ளது.

சோவியத்யூனியன் காலித்து எம்.ஐ.ஜி.21 ரக இராணுவ விமானங்களை ஈராக் பாவித்து வருவதாகவும், இந்த விமானங்களுக் கான உதிரிப்பாகங்களை வொஸ் னிய நிறுவன மொன்று வழங்கியி ருந்ததாகவும் அமெரிக்கா கடந்த மாதம் குற்றஞ்சாட்டியிருந்தது.

இந்த விபரங்களை நேட்டோ அமைதிப் படையினர் சோதனையிடடதாகவும்,அவ்வேளை உதிரிப்பாகங்களை ஏற்றுமதி செய்தமைக்கான சான்றுகள் கிடைத்திருப்பதா கவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சு-4)

# அமெரிக்காவின் தீர்மானம் மீதான விவாதம் ஐ. நா. பாதுகாப்பு சபையால் ஒத்திவைப்பு

(பக்தாத்)

ஈராக்கின் அணு ஆயுதங்களை அகற்றுவது குறித்து அமெரிக்காவின் தீர்மானம் மீதான விவாதத்தை ஐ.நா. பாதுகாப்புச் சபை ஒத்தி வைத்துள்ளது.

அமெரிக்காவின் தீர்மானத்திற்கு ரஷ்யா,சீனா,பிரான்ஸ், ஆகிய ஐ.நா வின் உறுப்பு நாடுகள் எதிர்ப்புத் தெரி வித்துள்ளன.

பாதுகாப்புச் சபையின் அங்கீகாரம் பெறாமலேயே பக்தாத்தை தாக்குவதற்கு அமெரிக்காவின் இத் தீர்மானம் வகை செய்து விடுமென இந்நாடுகள் குற்றஞ்சாட்டியுள்ளன.

இதேவேளை ஆய்வாளர்களிற்கு ஒத்துழைப்பு கொடுக்காவிட்டால் தீவிர விளைவுகளை எதிர் நோக்க வேண்டியிருக்குமென அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளது. (சு-2)

## போலந்து ஜனாதிபதி ஆப்கானிஸ்தான் சென்றுள்ளார்

(வார்ஸா)

போலந்து நாட்டு ஜனாதிபதி அலெக்சாந் போஸ்னிஸ்கி ஒரு நாள் விஜயத்தை மேற்கொண்டு நேற்று ஆப்கானிஸ்தான் சென்றுள்ளார்.

ஆப்கானிஸ்தான் சென்றுள்ள இவர் அந்நாட்டுத் தலைவர்களுடன் இரு நாடுகளுக்கு மிடையிலான உறவுகள் பற்றிப் பேச்சு வார்த்தை நடத்தவுள்ளார்.

இதேவேளை ஆப்கானிஸ்தானில் செயற்பட்டு வரும் சர்வதேச படையில் இடம் பெறும் போலந்து வீரர்களையும் ஜனாதிபதி அலெக்சாந் சந்திக்கவுள்ளார். (சு-4)

# கஸ்பியன் கடலில் கப்பல் கவிழ்ந்தது 40இற்கும் அதிகமானோர் பலி

கஸ்பியன் கடலில் பயணிகளையும்,எரிபொருட்களையும் ஏற்றிச் சென்று கொண்டிருந்த கப்பல்ஒன்று கவிழ் ந்ததில் 40 இற்கும் மேற்பட்டோர் கடலில் மூழ்கி உயிரிழந்துள் ளனர்.

இக்கப்பல் மோசமான கால நிலைக்கு மத்தியில் சென்றமையினாலேயே இவ்விபத்து சம்பவித்துள்ளது என கால நிலை ஆய் வாளர்கள் கருத்துத் தெரிவித் துள்ளனர்.

இதேவேளை இக்கப்பலில் 51 பேர் பயணம் செய்ததாகவும், 1000 தொன நிறையுடைய எரிபொருட்கள் இருந் ததாகவும் கப்பல் உரிமையாளர் தெரிவித்துள்ளார். (சு-4)

# யுத்த நிறுத்தத்தைத்தொடர்ந்து பேச்சு வார்த்தை ஆரம்பிக்க வேண்டும்

## மேற்கு ஆபிரிக்க நாடுகளின் தலைவர்கள்

(லண்டன்)

ஐவரிக்கோஷ்ட் அரசும், கிளர்ச்சிவாதிகளும் உடனடியாகப் பேச்சு வார்த்தை நடத்த வேண்டுமென மேற்கு ஆபிரிக்க நாடுகளின் தலைவர்கள் கூறியுள்ளனர்.

ஐவரிக்கோஷ்டில் கடந்த ஒரு மாதகாலமாக இடம் பெற்றுவரும் யுத்தம் தற்போது இருதரப்பு யுத்த நிறுத்தத்தின் மூலம் போர் ஓய்ந்துள்ள வேளை பேச்சு நடத்த வேண்டும் என மேற்கு ஆபிரிக்கர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

தெரிவிப்பு அத்துடன்,அரசுக்கும் கிளர்ச்சிவாதிகளுக்குமிடையிலான யுத்த நிறுத்தத்தை தற்போது கண்காணித்து வரும் பிரான்சுப் படைக்குப் பதிலாக மேற்காபிரிக்கத் துருப்பினரை ஈடுபடுத்துவது என்று அவர்கள் தீர்மானித்துள்ளனர்.

தென்னாபிரிக்கா, டோவோ, நைஹர், மாலி,நைஜீரியா ஆகிய நாடுகளின் தலைவர்களே மேற்படி இத்தீர்மானங்களை எடுத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (சு-4)

## அமெரிக்கா வேண்டுகோள்

உலகளாவிய ரீதியில் பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தத்தில், ஒரு பகுதியாக குடிவரவு தொடர்பாகவும், விமானநிலையங்கள், துறை முகங்களில் கடுமையான பாதுகாப் பை மேற்கொள்ளவும் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அமெரிக்கா அதன் வர்த்தகப் பங்காளிகளான பசுபிக் கரையோர நாடுகளிற்கு அறிவுறுத்தியுள்ளது.

மெக்ஸிக்கோவில் இடம்பெற்ற ஆசிய பசுபிக் பொருளாதார கூட்டுறவு மாநாட்டிலேயே அமெரிக்கா இவ் அறிவித்தலை விடுத்துள்ளது. (-02)

# மத்திய கிழக்குப் பிரச்சினைக்கு தீர்வுகாணும் வகையில்பேச்சு நடத்தப்படும

(வாஷிங்டன்)

மத்திய கிழக்குப் பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் அமெரிக்க இராஜாங்க அமைச்சின் உதவிச் செயலர் வில்லியம் பேர்ன்ஸ் இஸ்ரேலிற்குச் சென்றுள்ளார்.

இரண்டு வாரங்கள் மத்திய கிழக்குப்பகுதியில் பல் வேறு கட்டப் பேச்சு வார்த்தைகளை நடத்தவுள்ள வில்லியம் பேர்ன்ஸ் மத்திய கிழக்குத் தொடர்பான அமெரிக்காவின் திட்டத்தை அச்சமயம் முன்வைப்பார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2005 ஆம் ஆண்டிற்குள் பலஸ்தீன நாடு உருவாக்கப்படல், பலஸ்தீனத்தில் அரசியல் சீர்திருத்தங்கள் கொண்டு வரப்படுதல், புதிய யூதக் குடியிருப்புக்களை இஸ்ரேல் அதிகரித்துவருவதைக் கைவிடுதல், 2003 ஆம் ஆண்டிற்குள் பலஸ்தீனர்கள வாழும் அத்தனை பகுதிகளிலிருந்தும் இஸ்ரேலியப் படையினரை விலக்குதல் ஆகிய விடயங்கள் அமெரிக்காவின் தீர்வுத்திட்டத்தில் இடம் பெற்றிருப்பதாக ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (சு-2)

# வடகொரியாவிலிருந்த ஜப்பானியர்களை மீண்டும் அங்கு செல்ல அனுமதிக்கக்கூடாது

(பியோங்யாங்)

வடகொரியாவினால் கடத்தப்பட்டு விடுவிக்கப்பட்ட 5 ஜப்பானியர்களும் மீண்டும் வடகொரியா செல்வதற்கு ஜப்பானிய அரசு அனுமதிக்கக் கூடாது என்று 5 ஜப்பானியர்களின் உறவினர்களும் நண்பர்களும் ஜப்பானிய அரசிற்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

24 வருடங்களிற்கு முன்னர் தமது நாட்டுப் படையினருக்கு ஜப்பானிய கலாசாரத்தை கற்றுக் கொடுப்பதற்காக 13பேரைக் கடத்தியதாக வடகொரியா முன்னர் அதனை மறுத்த போதும், தற்போது அதனை ஒப்புக்கொண்டதோடு 5 ஜப்பானியர்கள் உயிருடன் இருப்பதாகவும் அவர்களை மீண்டும் சொந்தநாடான ஜப்பானிற்கு திரும்புவதற்கும் அனுமதியளித்திருந்தனர்.

இதனையடுத்து, தமது சொந்த நாட்டிற்கு திரும்பிய 5 ஜப்பானியர்களும் தாங்கள் மீண்டும் வடகொரியாவிற்கே திரும்ப விரும்புவதாக கருத்து வெளியிட்ட போது, இவர்களது குடும்பத்தினையும் வடகொரியாவே சிறைவைத்துள்ளது என்றும் கூறிய இவர்களது உறவினர்களும் நண்பர்களும் இவர்கள் மீண்டும் வடகொரியா செல்வதற்கு ஜப்பானிய அரசு அனுமதியளிக்கக் கூடாது என்று வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதேவேளை இவ் இருநாட்டு அரச பிரதிநிதிகளும், அடுத்தவாரம் தமக்கிடையேயான உறவினை சீர் செய்யும் வகையில் பேச்சுவார்த்தையொன்றை நடத்தவுள்ளனர் என்றும் இப் பேச்சுவார்த்தையின் போதும் கடத்தப்பட்ட 13 ஜப்பானியர்கள் பற்றியும் விவாதிக்கப்படும் என்றும் அரசியல் விமர்சகர்கள் தெரிவித்துள்ளனர். (02)

## கொலம்பிய அரசிற்கு நிபந்தனை விதிப்பு

( பேர்கோடா )

கொலம்பியாவில் சார்க் இயக்கத்தினால் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல்வாதிகள் மற்றும் பொலீஸ் அதிகாரிகளை விடுதலை செய்ய வேண் டுமாயின் கொலம்பிய அரசாங்கம் தடுத்து வைத்துள்ள தமது போராளி களை விடுதலை செய்யவேண்டும் என்று சார்க் இயக்கம் கொலம்பிய அரசாங்கத்திற்கு நிபந்தனை விதித் துள்ளது.

கொலம்பிய பாதுகாப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள சார்க் இயக்க தீவிரவாதிகளின எண்ணிக்கை மூவாயிரத்திற்கும் அதிகமாகுமென அந் நாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (சு-2)

# பாலித்தீவுச் சம்பவ சந்தேக நபர்களின் உருவப்படம் தயாரிப்பு

(ஜகார்த்தா)

இந்தோனோசியாவின் பாலித்தீவில் கடந்த 12ந்திகதி இடம்பெற்ற பயங்கரவாதக் குண்டுவெடிப்புச் சம்பவத்தின் சந்தேக நபர்களாக கருதப்படும் மூவரின் உருவப் படங்களை தயாரித்துள்ளதாக சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தும் சர்வதேச குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இச்சந்தேக நபர்கள் மூவரும் இந்தோனேசியாவைச் சேர்ந்தவர்களாவார்கள்.

இதேவேளை அதிகாரபூர்வமாக இம் மூவரும் சந்தேக நபர்களாக பெயரிடப்படவில்லை என்றும் பொலிசாரின் உள்விசாரணைகளுக்கு மட்டுமே இந்த உருவபடங்கள் பயன்படுத்தப்படும் என்றும், பொதுமக்களிடம் இவை விநியோகிக்கப்படமாட்டாதென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (சு)


வலம்புரியின்

# கல்விச் சேவை

அன்பார்ந்த அதிபர்களே!

யாழ். மாவட்டத்தில் இயங்கி வரும் பாடசாலைகளின் தோற்றம், அவற்றின் சமூகப்பிணைப்பு, நிறுவுனர் பற்றிய குறிப்பு; மாணவர்கள் படைத்த சாதனைகள், தற்போது பாடசாலையின் வளர்ச்சி, தேவைப்பாடுகள் என்பனவற்றை வெளிப்படுத்தி வரலாற்று ரீதியாக ஆவணப்படுத்தும் முயற்சியில் வலம்புரியின் கல்விக்குழு ஈடுபடவுள்ளது.

வாரத்தில் ஒருநாள்
வலம்புரியில் வலம் வரவிருக்கும்

"எங்கள் கல்விச்சாலை"

பகுதியில் உங்கள் பாடசாலையும்
இடம்பெற வேண்டுமாயின்
உங்கள் சம்மதக்கடிதத்தை
"எங்கள் கல்விச்சாலை"
வலம்புரி
இல.15 வெள்ளாந் தெரு,
யாழ்ப்பாணம்.
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

வலம்புரியின் கல்விக்குழுவினர் தங்களின் பாடசாலைக்கு நேரில் விஜயம் செய்வர்.

அன்புசால் அதிபர்களே!

உங்கள் பாடசாலைகளின் பழம் பெருமைகளை வெளிப்படுத்த வலம்புரி தரும் அரியவாய்ப்பைத் தவற விடாதீர்கள். ஆசிரியர்

# இன்று ஒரு தகவல

## தவறு செய்வது தவறல்ல!

ஒரு பூங்கா; அங்கே ஒருவர் ஏதோ ஆழ்ந்த யோசனையோடு நின்றார். அந்தப்பக்கமாக இன்னொருவர் வந்தார். இவரைக் கவனித்தார். 'என்ன யோசனை?' என்று கேட்டார். 'எப்படி எழுந்திருப்பது என்று யோசனை பண்ணிக் கொண்டிருக்கிறேன்' என்றார். கேட்டவருக்கு ஒரு மாதிரியாக ஆகிவிட்டது. ஏற்கனவே நிற்கின்ற ஒருவர் எப்படி எழுந்துநிற்பது என்று யோசிக்கிறார் என்றால் ..,? அதன்பிறகு இவர் யோசிக்க ஆரம்பித்தார்.

கீழே விழுந்தால்தானே எழுந்துநிற்க முடியும். எனவே, எழவேண்டும் என்று நினைக்கிறவர்கள் விழவேண்டும். இவர் முதலில் கீழே விழவேண்டும்; அதன்பிறகே எழுவது எப்படி என்று சிந்திக்க முடியும். இந்த உலகத்தில் எல்லோருமே கீழே விழுந்து எழுந்தவர்கள் தான். குழந்தைப் பருவத்தில் கீழே விழாமல் நடைபயிலக் கற்றுக் கொண்டவர்கள் யாராவது உண்டா? மனிதன் விழுந்து புரண்டு எழுந்துதான் நடக்கக் கற்றுக்கொள்கிறான்;

ஓர் உண்மையை நாம் அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும். இந்த உலகத்தில் தவறு செய்யாத மனிதர்களே யாரும் கிடையாது. அப்படியிருக்கும்போது, எப்போதாவது நாம் தவறு செய்துவிட்டால் அதற்காக மனம் உடைந்து போகலாமா? வாழ்வில் வெறுப்படைந்து போகலாமா? ஒரு தவறு நடந்துவிட்டதா? அதற்காக மனம் உடைந்து போகாதீர்கள். அதை ஒருபாடமாக எடுத்துக் கொள்ளுங்கள். அதே தவறு மறுபடியும் நடக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள். அது போதும், தடைக் கல்லைப் படிக்கல்லாக மாற்றிக்கொள்ளுங்கள்;

ஓர் அலுவலகம். அங்கே ஓர் அதிகாரி உயர்ந்த பதவியில் இருந்தார். சிறந்த நிர்வாகி என்று பெயர் வாங்கியவர் அவர், அவர் தனக்குக் கீழே பணிபுரிகிறவர்களிடம்சொல்வாராம், 'இந்த நிறுவனத்தில் நீங்கள் எத்தனை தடவை வேண்டுமானாலும்தவறுசெய்யலாம். ஆனால் ஒரு விஷயம் ஒரே தவறை மறுபடியும் செய்யக் கூடாது. அதுமுக்கியம்' என்று இதைமேம் போக்காகப்பார்த்தால்... அவர் ஏதோ தன்னுடைய ஊழியர்களைத் தவறு செய்யத் தூண்டுவதுபோலத் தெரியும். ஆனால், உண்மை அப்படி அல்ல இன்றைக்கு என்ன நடக்கிறது தெரியுமா? அநேகமாக எல்லா மனிதர்களுமே ஒரே தவறைத்தான் மறுபடியும் மறுபடியும் செய்கிறார்கள்; விளையாட்டு வீரர்கள் ஒரே மாதிரியான தவறுகளைத் திரும்பத் திரும்பச் செய்வதுண்டு.

கணக்கு எழுதுகிறவர்களைப் பாருங்கள். ஒரே தவறை மறுபடியும் செய்வார்கள். அலுவலகம் வருகிறவர்களைக் கவனியுங்கள். ஒருநாள் தாமதமாக வந்தால்பரவாயில்லை, தினந்தோறும் தாமதமாக வருவார்கள்; இது மாதிரி செய்த தவறையே திரும்பத்திரும்பச் செய்வதற்கு என்ன காரணம்? சோம்பல், ஞாபகமறதி, கவனக் குறைவு, தன்னுடையதிறமை மீது அளவுக்குமீறியநம்பிக்கை இப்படி இவற்றில் ஏதாவது ஒரு காரணமாக இருக்கலாம் என்றார்கள் இதுபற்றி ஆய்வு செய்கிற வல்லுநர்கள்;

ஒருதடவை செய்த, தவறை மறுபடியும் செய்வதில்லை என்று முடிவுசெய்துகொண்டு அதைச் செயல்படுத்தக் கற்றுக் கொள்ளுங்கள். அது போதும். வாழ்க்கை வெற்றிகரமாக அமையும் என்கிறார்கள் அந்த அனுபவ சாலிகள்.

எனவே, வெற்றிகரமாக வாழ்க்கையில் நடைபோட விரும்பும் இளைஞர்கள் தவிர்க்க வேண்டியவை; முதலில் சோம்பலைத்தவிருங்கள். சுறுசுறுப்பாக இயங்குங்கள். இரண்டாவது ஞாபகமறதி; எந்தச் செயலிலும் ஈடுபாடு வேண்டும். அக்கறை வேண்டும். மூன்றாவது கவனக் குறைவு எதையும் அலட்சியப் படுத்தக்கூடாது. நான்காவது என்னால் முடியாதது எதுவும் கிடையாது- என்கிற அளவுக்கு மீறிய நம்பிக்கை ஆபத்தில் கொண்டு போய்விடக்கூடும். எனவே, இளைஞர்களே! முதல் தவறு உங்களுக்கு ஒருபாடமாக அமையட்டும்.

ஒருமனிதர் தன்னுடைய இரண்டு காதுகளிலும கட்டு (பண்டேஜ்) போட்டுக் கொண்டுவந்தார். அவருடைய நண்பர் அதைக்கவனித்து விட்டார். ''என்ன சார்'' ஆனது? என்றுவிசாரித்தார்; ஒன்றுமில்லை சார்! வீட்டில் மிகவும் ஆர்வமாக டி. வி. யிலேகிரிக்கெட்மாட்ச் பார்த்துக்கொண்டிருந்தேன், அப்போது என்மனைவி துணிகளுக்கு அயர்ண் பண்ணிக் கொண்டிருந்தாள். அயர்ண் பொக்சை அப்படியே வைத்து விட்டு அடுப்பங்கரைக்குபோய் விட்டாள். அந்தச் சமயம் பார்த்து டெலிபோன்மணி அடித்தது. அவசரமாகஓடிப் போய் அதைஎடுத்துக் காதில் வைத்தேன். அப்பொதுதான் தெரியும்..; அது அயர்ண் பொக்ஸ் என்கிற விஷயம்! சூடாகஇருந்ததால் சுட்டுவிட்டது, என்றார் அவர் 'ஒருகாது சரி சார்... இரண்டுகாதும் ஏன் சார் அப்படியானது?' 'என்றுகேட்டார்இவர் 'அதே ஆள்மறுபடியும் போன்பண்ணினானே' என்றார் அவர்.

தென்கச்சிகோ. சுவாமிநாதன்

# வரலாற்றுச் செல்வங்களைக் காக்க
# அமைச்சர் மகேஸ்வரன் நடவடிக்கை

(கொழும்பு)

வரலாறு, பண்பாடு தொடர்பான மூலகங்களும் செல்வங்களும் யாழ் குடாநாட்டில் இருந்து வெளியே எடுத்துச் செல்லப்படுவதால் தமிழ்க் கலாசாரத்திற்கு ஏற்படும் பேராபத்தைத் தடுத்து நிறுத்தும்வகையில் ஆராய்ந்து அறிக்கை தயாரிப்பதற்கு இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர் திரு மகேஸ்வரன் 7 பேர் கொண்ட குழு ஒன்றை நியமித்துள்ளார்.

இக்குழுவின், உறுப்பினர்களாக யாழ். பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ், யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் செ. பத்மநாதன், யாழ். பல்கலைக்கழக பட்டப்பின் படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் சி. க. சிற்றம்பலம், கலைப் பீடாதிபதி பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ணன், வரலாற்றுத்துறை முதுநிலை விரிவுரையாளர்களான சோ. கிருஷ்ணராஜா, ப. புஸ்பரத்தினம், இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் யாழ். பிராந்திய அலுவலக உதவிப் பணிப்பாளர் சிவ; மகாலிங்கம் ஆகியோரை அமைச்சர் நியமனம்செய்துள்ளார்;

இக்குழுவின் ஆரம்பக் கூட்டத்தை இயன்றளவு விரைவாகக் கூட்டி அதன் பணிகளை மேற்கொள்ளுமாறு அனைத்து உறுப்பினர்களையும் கேட்டுள்ள அமைச்சர் மகேஸ்வரன் குழுவின் பணிகளுக்குத் தேவையான எல்லா உதவிகளையும் வழங்குமாறு அரசாங்க அதிபரைப் பணித்துள்ளார்.

இதே வேளை, குழு தனது பணியை ஆரம்பித்து, ஒரு மாத காலத்திற்குள் அறிக்கையை தனக்கு சமர்ப்பிக்க வேண்டும் எனவுகும், ழுவின் நடைமுறைச் சாத்தியமான சிபாரிசுகளுக்கு ஏற்ப, உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள உத்தேசித்துள்ளதாகவும் இது குறித்து விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ)

## ச.ச.நிலையத்தில் தங்கவைப்பு

(ஊர்காவற்றுறை)

மீளக்குடியமரவந்த ஊர்காவற்றுறையைச்சேர்ந்த 5குடும்பங்கள் ஊர்காவற்றுறைபருத்தியடைப்பு சனசமூக நிலையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த கால வன்செயல்கள் காரணமாக இவர்களின் வீடுகள் அழிந்துள்ளமையினால் இருக்க இடமற்ற நிலையில் இவர்கள் இங்கு தங்க வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

(உ75)

## சிறைச்சாலை வரலாறு கணனியில் பதிவு

(கண்டி)

150 வருடங்கள் பழமை வாய்ந்தகண்டி போகம்பரைச் சிறைச்சாலையின் வரலாறும், சிறைக் கைதிகளின் விபரங்களும் கணனியில் பதிவுசெய்யப் படவுள்ளன.

இங்கு ஆயிரத்திற்கும் அதிகமான சிறைக் கைதிகள் உள்ளனர் இவர்களின் விபரங்கள் மற்றும் சிறைச் சாலை தொடர்பான விபரங்களை கணனியில் பதிவுசெய்து வைப்பதன் மூலம் எதிர்காலத்தில் பல அனுகூலங்கள் ஏற்படும் எனஎதிர்பார்க்கப்படுகிறது.

(உ)

## மின்சாரம் வழங்குக

(ஆனைக்கோட்டை)

சாவல் கட்டு ஜே/ 131 கிராம சேவையாளர் பிரிவில் உள்ள 100 வீட்டுத் திட்டத்திற்கு மின்சாரம் வழங்குமாறு கோரிக்கை விடுககப்பட்டுளளது.

சாவல் கட்டு கிராமத்தில் கடற்றொழில் அமைச்சினால் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ள இவ்வீட்டுத் திட்டத்தில் குடியேறி 6 மாதம் கடந்தும் மின்சார வசதி வழங்கப்பட வில்லை என அத்திட்ட மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

(உ-201)

## தேவாலயம் புனரமைப்பு செய்யப்படுமா?

(தென்மராட்சி)

தென்மராட்சி நுணாவில் பகுதியில் உள்ள தென்னிந்திய திருச்சபைத் தேவாலயம், அதன் அண்மையில் உள்ள அரசினர் தமிழ்கலவன் பாடசாலை ஆகியன சேதமடைந்து இன்னமும் திருத்தப்படாத நிலையில் உள்ளன.

இதனால் இப்பகுதியில் உள்ள கிறிஸ்தவ மக்கள் தூர இடங்களிற்கு வழிபாட்டிற்காகச் சென்று வருவதுடன், நுணாவில் அரசினர் தமிழ்க் கலவன்பாடசாலை, மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலய கட்டடத்தில் இயங்கி வருவதால் இச் சுற்றாடலில் உள்ள கல்வி கற்கும் பிள்ளைகள் பல சிரமங்களை எதிர் நோக்குகின்றனர்; (உ-111)

## 50 பாடசாலைகளுக்கு மலசலகூட வசதிகள்

(மட்டக்களப்பு)

வடக்கு-கிழக்கு மாகாண சமூக மீளமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின்கீழ். மட்டக்களப்பு மாவட்டத்தில் 50 அரசாங்கப் பாடசாலைகளிற்கு மலசலகூட வசதிகள் மற்றும் குடிநீர் வசதிகள் ஏற்படுத்தப் படவுள்ளன; ஆசிய அபிவிருத்திவங்கி இதற்கான நிதியுதவியை வழங்கியுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கல்குடா கல்விவலயத்தில் 16 பாடசாலைகளும் பட்டிருப்பு, மட்டக்களப்பு ஆகிய வலயங்களில் தலா 17 பாடசாலைகளும் இத்திட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

(உ-10)

## யு.என்.எச்.சி.ஆர் ஏற்பாட்டில் வறிய குடும்பங்களுக்கு தற்காலிக வாழ்விடங்கள்

(ஊர்காவற்றுறை)

பருத்தியடைப்பு ஊருண்டிப் பகுதியில் யு.என்.எச்சி. ஆர் நிறுவனத்தினால் 25 தற்காலிக வீடுகள் அமைக்கப்படவுள்ளன;

இப்பகுதியில் அண்மையில் மீளக்குடியமர்ந்த வறியகுடும்பங்கள் இத் திட்டத்தின் பயனாளிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

இவ்வீடமைப்புத் திட்டத்தில் இரு மலசல கூடங்களும் 3 கிணறுகளும் அமைககப் படவுள்ளதும் குறிப்பிடத் தக்கது;

(உ-75)

## நுகேகொட கூட்டத்தில் சந்திரிகா பங்கேற்கவில்லை

(கொழும்பு)

பொஜன ஐக்கியமுன்னணியின் அரசியல்கூட்டம் நேற்று முன்தினம் நுகேகொடையில் நடைபெற்றது

இக்கூட்டத்தில் பல்லாயிரக் கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ, மற்றும் பொதுஜன ஐக்கிய முன்னணிக் கட்சித்தலைவர்களும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்ககலந்து கொள்வார்என எதிர்பார்க்கப்பட்டபோதும் அவர் அக் கூட்டத்தில் கலந்துகொள்ள வில்லை,

இதேவேளை, மேற்படிகூட்டத்தில் கலந்துகொள்ளும் வகையில் நேற்றுமுன்தினம் ஏற்பாடாகியிருந்த நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசனுடனான சந்திப்பை இரத்துச் செய்திருந்ததும் குறிப்பிடத் தக்கது;

(ம)

## தென்னிந்திய அறிஞர்கள் மில்லரின் தூபிக்கு அஞ்சலி

(மந்திகை)

விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் தலைவரும் சட்டசபை உறுப்பினருமான திருமாவளவன் மற்றும் அவருடன் வருகை தந்திருந்த இந்திய அறிஞர்கள் கடந்த செவ்வாயன்று வடமராட்சிப் பிரதேசத்திற்கு விஜயம் செய்தனர்;

வடமராட்சி அரசியல்துறை அலுவலகத்திற்குச் சென்ற இவர்கள் அங்கு விடுதலைப் புலிகளை சந்தித்து வடமராட்சி நிலைமைகளைக் கேட்டறிந்தனர்;

பின்னர், 1987ஆம் ஆண்டு மில்லரின் தற்கொலைத் தாக்குதலுக்குள்ளான நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தினை பார்வையிட்டதுடன், மில்லரின் நினைவுத் தூபிக்கு மலர் அஞ்சலி செலுத்தினர்.

தொடர்ந்து வடமராட்சி மாவீரர் துயிலும் இல்லம், தீருவிலில் அமைந்துள்ள குமரப்பா புலேந்திரன் உட்பட பன்னிரு வேங்கைகளின் நினைவுத்தூபி என்பவற்றுக்குச் சென்று அஞ்சலி செலுத்தினர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிறந்த வீட்டுக்குச் சென்று பார்வையிட்டதுடன், அங்கு புகைப்படங்களையும் எடுத்துக்கொண்டனர்.

அதேவேளை கொடிகாமம், கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லங்களுக்குச் சென்று அஞ்சலி செலுத்தியதுடன், யுத்தத்தால் பாதிப்படைந்த தென்மராட்சிப் பிரதேசத்தையும் பார்வையிட்டனர்.

(உ)

## வவுனியா வடக்கில் கண்ணிவெடி அபாயம் முற்றாக நீங்கவில்லை

(வவுனியா)

வவுனியா வடக்கு இராணுவக் கட்டுப்பாட்டுப்பிரதேசத்தில் கண்ணிவெடி அபாயம் முற்றாக நீங்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது;

எனவே இப்பிரதேசத்தில் மீளக்குடியமரும் மக்கள் மிகவும் விழிப்பாக இருக்கவேண்டும் என்று தமிழர் புனர்வாழ்வு கழகத்தின் வவுனியா மாவட்ட இணைப்பாளர் ரி மூர்த்தி கேட்டுள்ளார்;

இதேவேளை வவுனியாவில் பரவலாக மிதிவெடிகள் இருக்கும் அபாயம் உள்ளமைஇனங் காணப் பட்டதை அடுத்து அங்கு மிதிவெடிகளை அகற்றும் பணியினை மனிதநேய அமைப்பின் வெண்புறாஇயக்கம் ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(உ-10)

# சகோதர அன்புக்குச் சான்றாக விளங்கியோர்

# இளங்கோவடிகளும் சேரன் செங்குட்டுவனுமே!

**வித்துவான் மா. இராசமாணிக்கம்**

பெருமையுற்ற சேர அரசர்களில் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் என்பவன் ஒருவன். அவன் வஞ்சிமாநகரைத் தலைநகராகக்கொண்டு சேரநாட்டை ஆண்டுவந்தான். அவன் தோள்வலியும், வாள்வலியும் உடையவன். அம்மன்னன் இமயமலைவரையில் சென்று தன் வீரப் பிரதாபங்களைக் காட்டியுள்ளானாதலால், இமயவரம்பன் என்ற சிறப்புப்பெயரைப்பெற்றான்.

அம்மன்னனுக்குச் செங்குட்டுவன், இளங்கோ என்னும் இரு மைந்தர் இருந்தனர். அவர்கள் உத்தம அரச இலக்கணங்களைப்பெற்று இருந்தார்கள். யானையேற்றம், குதிரையேற்றம் முதலியன கற்றுச் சிறந்த வீரர்களாய் விளங்கினார்கள். அவர்கள் கல்வியிலும் சிறந்து விளங்கினார்கள். தன் மக்களின் கூர்ந்த அறிவையும் ஆற்றலையும் கண்ட சேரலாதன் மகிழ்ச்சி அடைந்தான்.

### கொலுமண்டபத்தில் மைந்தர்களுடன்

ஒருநாள் சேரலாதன் தன் இருமைந்தரையும் நன்றாய் அலங்கரித்துக் கொலுமண்டபத்திற்கு அழைத்துச் சென்றான். அரசன் தன் அரியாசனத்தில் அமர்ந்தான். அவனது ஆசனத்திற்குச் சரியான வேறு இரு ஆசனங்களில் இருமைந்தரும் அமர்ந்தனர். அவ்விருவரும் அரசனுக்கு இருபுறத்திலும் வீற்றிருந்தகாட்சி காண்போர் மனதைக் கவரத்தக்கதாய் இருந்தது.

அரசன் கொலுமண்டபத்தில் வந்து அமர்ந்ததும் சிற்றரசரும், பிரபுக்களும், அமைச்சரும் அவனடிபணிந்தார்கள். அரசன் அரச காரியங்களைக் கவனிக்கலானான். அவ்வமயம் அங்கு இருந்த அவையோரில் சோதிடன் ஒருவன் செங்குட்டுவனையும், இளங்கோவையும் மாறி மாறிப் பார்த்தான். ஏதோ எண்ணியவன் போல அந்நிமித்திகன் எழுந்து, சேரலாதனைப் பணிந்து, 'மன்னர் மன்னரே, தங்களுக்கு இருபுறங்களிலும் வீற்றிருக்கும் இளஞ்செம்மல்கள் தங்கள் செல்வப் புதல்வர்கள் என்று நினைக்கிறேன். அவ்விருவரில் இளைய குமாரரிடத்தில் உத்தம அரச இலட்சணங்கள் அமைந்துள்ளன. தங்களுக்குப் பின் பட்டத்தை இவ்விளவலே ஏற்பார்' என்றான்.

### இளங்கோ சீற்றம்

அவையிலிருந்த அனைவரும் சோதிடன் கூற்றைக் கேட்டனர். அவர்கள் மனம் திடுக்கிட்டுச் செங்குட்டுவனையும், இளங்கோவையும், சேரலாதனையும் மாறி மாறிப் பார்த்தனர். அரசன் ஒன்றும் தோன்றாது விழித்தான். அவன் முகம் வாட்டமுற்றது. செங்குட்டுவன் முகம் கறுத்தது. இளங்கோவின் விழிகள் சிவந்தன. கடைப்புருவம் நெற்றி முற்றச் சென்றது. உடல் வியர்த்தது. உதடுகள் துடித்தன. அவன் சோதிடனை வெறிக்கப்பார்த்துக் கோபித்தெழுந்து, அடா! மதியற்ற சோதிடனே! என்ன சொன்னாய், பிழையான வார்த்தைகளைக் கொட்டி விட்டனையே! என்னிடத்தில் என்ன உத்தம இலட்சணங்களைக் கண்டுவிட்டாய்? என் அண்ணனிடம் இல்லாத இலட்சணங்கள் எவை என்னிடம் உள்ளன? உன் வாய்க்கு வந்ததெல்லாம் கூறிவிட்டாயே! நீ சொன்ன விஷயம் நடக்கக் கூடியதா? நீயே யோசித்துப்பார். மூத்தவன் இருக்க, இளையவன் பட்டமடைந்தான் என்று எங்கேனும் நீ கேள்விப்பட்டதுண்டா? இராம கதையை அறியாயோ? அந்தோ! நிமித்திக நான் கூறுவதைக்கேள்.

'சீராமன் தன் தாய் கோசலையிடம் சென்று, 'அம்மா, என் இளவல் பரதன் பட்டமடையப் போகிறான். நான் காடடையப் போகிறேன்,' என்று கூறியபோது, அவ்வம்மை என்ன சொன்னாள் அறிவையோ? அவள் சீராமனை நோக்கி 'மைந்த, பரதன் நாடாள்வதைக் கேட்கச் சந்தோஷிக்கின்றேன். அவன் மூன்று உலகங்களிலும் உள்ளாரை விட நிறைந்த குணங்களையுடையவன். உன்னைவிடப் பன் மடங்கு நல்லவன். குணக் குன்றாயவன். என்றாலும் மூத்தவனாகிய நீயிருக்க இளையவனாகிய பரதன் பட்டமடைதல் பழுதாயிற்றே! இவ்வண்ணம் இதுவரையில் ஒருவரும் செய்தாரில்லையே! முறைதவறி இக்காரியத்தைச் செய்ய நின் தந்தையார் எப்படி இசைந்தார்?' என்றாள்.

'' ஆதலால், சோதிடனே, கனவிலும் நினைக்கத்தகாத பழிச்சொல்லைப் பின்பற்றுவது இவ்வரசர் குலமன்று என்பதை வற்புறுத்திச் சொல்லுகிறேன்கேள். நாங்கள் தரும நெறியினின்றும் தவறிஎக்காரியமும் செய்யத்துணியோம்,'' என்றுபேசிமுடித்தான்.

### சபதம் செய்தல்

இளங்கோ கூறியவற்றைக் கேட்டசோதிடன் அச்சங்கொண்டான், தனக்குத் தெரிந்ததை மறைக்காமற் கூறியது இளங்கோவிற்குச் சீற்றத்தை உண்டுபண்ணியதென்பதை நன்கு உணர்ந்தான். அவன் இளங்கோவைப் பார்த்து, 'இளவரசரே! யான் உமக்குள்ள குறிகளைக்கண்டு எனக்குத் தோன்றியதைக் கூறினேன். என்மீது நீர்சினங்கொள்ளலாகாது. நீர்அதைப் பிழையென்று கருதுவீராயின், என்னை மன்னிப்பீராக' என்றான்.

அப்போதுஇளங்கோஎழுந்து ''சோதிடனே என்னிடம் அரசனுக்குரிய இலட்சணங்கள் அமைந்திருக்கவில்லை. துறவிக்குரியஇலட்சணங்களே அமைந்துள்ளன. நான் துறவறத்தையே மேற்கொள்வேன். இல்லறம் எனக்கு இன்பத்தைப் பயவாது ஆதலின்நான் இந்நிமிடமுதற் கொண்டு துறவியே இதுமுக்காலும் சத்தியம்'' என்று கூறிமுடித்தான்.

இளங்கோவின் வீரவார்த்தைகளைக் கேட்ட அவையோர் அயர்ந்தனர். அவர்கள் ''என்ன! இவ்விளவல் சற்றேனும் முன்பின் யோசியாது இத்தகையகொடியவிரதத்தை மேற்கொண்டானே! வீடுமன் தன் தந்தையான சந்தனுவின் விருப்பத்தை நிறைவேற்றக் கொடிய விரதத்தைப் பூண்டான். அவ்வீடுமனை ஒத்து விளங்குகின்றான் இவ்விளங்கோ' என்று எண்ணிவாளாவிருந்தார்கள்.

### மன்னவனின் மனவருத்தம்

மைந்தனது சபதத்தைக் கேட்டமன்னவன்மனம் வருந்தினான். அவன்விழிகளில்நீர் அரும்பிற்று. அவன் இளங்கோவைநோக்கி 'மதியுடை மைந்த, என்னகாரியம் செய்தனை! சிறிதேனும் ஆழ்ந்து யோசியாது, கேவலம் ஒரு நிமித்திகன் பிதற்றிய வார்த்தைகளைக் கேட்டு வெகுண்டு, இங்ஙனம் துறவியாகத் துணிந்தது முறையோ? நீ அரசனாகி முடிசூடி அவனியாள விருப்பமின்றேல், இல்லற வாழ்க்கையை மேற்கொண்டிருத்தல் ஆகாதோ? தமையனுக்கு துணைவனாயிருந்து வாழ்தல் அடாதோ? அன்புள்ள குமர, கொடிய சபதம் செய்து விட்டனையே!'' என்று கூறி, மனம் வருந்தினான்.

இளங்கோ தந்தையைப் பணிந்து, ''தந்தையீர், யான் பதற்றமாக எதையும் செய்யவில்லை. ஆய்ந்தோய்ந்தே இதனைச் செய்தேன். யான் கூறுவதைக் கேளுங்கள். இல்லறத்தில் இருக்கலாகாதா என்கிறீர்கள். ஒரு பெண்ணை மணந்து வாழ்வதில் சுகம் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. ஆதலால், யான் துறவறம் மேற்கொண்டேன். மேலும் என் அண்ணனோடு என்னை வாழச் சொன்னீர்கள். பல துட்டர்கள் என்னைச் சூழ்ந்து என் அறிவை மாற்றி எனக்கும் என் தமையனுக்கும் பகைமையுண்டாக்குவார்கள். கலங்காத என் அறிவு கலங்கினும் கலங்கும். அறிவு கலங்கி அருமை அண்ணனோடு மன வருத்தம் கொள்ளுவதில் என்ன பயன்? இவற்றையெல்லாம் முன்னர் யோசித்தே யான் துறவு மேற் கொண்டேன். என் அருமைத் தந்தையீர், என்னை மன்னித்து ஆசீர்வதிப்பீராக'' என்று கூறினான்.

### செங்குட்டுவனின் வேண்டுதல்

அது வரை நடந்த செய்திகளையெல்லாம் கூர்ந்து கவனித்து வந்தான் செங்குட்டுவன், தன் இளவல் தன்னிடம் கொண்டுள்ள அன்பை எண்ண அவன் மனம் மகிழ்வெய்தியது. ''என்ன ஆச்சரியம்! உலகில் இத்தகைய தம்பியும் உளனோ? அருங்குணமும், சீரிய அறிவும், விரிந்த நோக்கமும் கொண்ட இவ் விளையவனை என் தம்பியாகப் பெற யான் முற்பிறப்பில் எத்தவத்தைச் செய்தேனோ! என் பாக்கியமே பாக்கியம்!'' என்று எண்ணி மகிழ்ந்தான். அவன் விழிகளில் ஆனந்த நீர் அரும்பியது. செங்குட்டுவன் இளங்கோவைத் தன் இரு கைகளாலும் அணைத்து

''என் ஆருயிர்அனையாய், சகோதர அன்பும், புனித வாழ்க்கையும்பரிசுத்த எண்ணமும் உடைய உன்னைத்தம்பியாகப் பெற்ற எனக்கும் குறைவுண்டோ? நான் முற்பிறப்பில் நல்வினை செய்வதன் என்றே எண்ணுகின்றேன். அப்பா, உன் விருப்பப்படி அரசை ஏற்றுக் கொள்வேன், ஆனால் நீ எனக்கு உற்ற துணையாக இருக்க வேண்டும், நீ என்னை விட்டு அகன்றால் என் வாழ்க்கை பயனற்றதாகும். உன்னை விட்டுப்பிரியயான் இசையேன் ஆதலின், நம்குலம் நற்பெயர் பெற்று வாழவேண்டுமாயின் நீ என்னை விட்டு அகலா திருக்க வேண்டும் என் அருஞ் செல்வ, உன்முன்னோன் வேண்டுதலை நிறைவேற்றுவாயாக'', என்றான்,

''இளங்கோ, அண்ணா, தங்கள் விருப்பப்படியான் தங்களுடனே இருப்பேன், தாங்கள் கவலை கொள்ள வேண்டாம் என்று வாக்குறுதி தந்தான். அன்று முதல் யாவரும் இளங்கோவை, இளங்கோ வடிகள் என்று வழங்கத்தலைப்பட்டனர்.

---

## நெருந்தீவில் உள்ள பொலிஸ் நிலையத்தை அகற்றக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவில் இருந்து பொலிஸ் நிலையத்தை உடனடியாக அகற்றுமாறு கோரி நெடுந்தீவு பொதுமக்கள் ஒன்றியம் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் இலங்கைப் பிரதிநிதிக்கு மகஜர் ஒன்றை அனுப்பியுள்ளது.

அந்த மகஜரில் குறிப்பிடப் பட்டுள்ளதாவது;

2000 ஆம் ஆண்டு எமது பகுதியில் சிவில் நிர்வாகப் பணிகளை மேற்கொள்ளவென வந்தஸ்ரீலங்கா பொலிஸார் எமதுதீவுக்கெனஇருந்த தனித்துவமான பண்பாட்டுக் கலாசார சமூகப் பெறுமானங்களை சிதைவு படுத்தியது மட்டுமல்லாமல், எமது தீவின் பொருளாதாரத்தையும் சூறையாடினர்.

இதுபற்றிஅப்போதுமுறைப்பாடு செய்ததன் மூலம் இங்கிருந்து பொலிஸார் வெளியேற்றப்பட்டனர்.

இந் நிலையில்மீளவும் சிவில் நிர்வாகப்பணி என்ற போர்வையில் எமதுதீவில் பொலிஸ் பிரிவினர்வந்திருப் பதுஎம்மை விசனமடையவைக்கிறது.

உடனடியாக இங்கிருந்து பொலிஸ் பிரிவினரை வெளியேற்ற ஆவன செய்யுமாறு தங்களைத் தயவாகக் கேட்டுக் கொள்கிறோம்.

எமது தீவு யாழ்.குடாநாட்டில் இருந்து நீண்ட தொலைவில்உள்ளது. நான்குபக்கமும் கடலால் சூழப்பட்டுள்ளது. வெளித்தொடர்புகளை உடனுக்குடன் பெறக்கூடிய சூழல்இல்லை.

இங்கு பொலிஸாரும், இராணுவமும் முகாமிட்டிருப்பதால் எமது மக்கள் எந்நேரமும் பயத்துடனும் நிம்மதியின்றியும் வாழ வேண்டிய நிலைமையே உள்ளது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் நல்லெண்ண புறச்சூழல் ஒன்று எமது தீவில் ஏற்பட்டுள்ள நிலையில் பொலிஸ் பிரிவு எமக்குத் தேவையில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

---

கூட்டமைப்பு எம். பிக்கள்

## பாராளுமன்ற அமர்வில் நேற்று பங்கேற்றனர்

(கொழும்பு)

நேற்று முன் தினம் சபை ஒத்திவைப்பு வேளையில், விவாதத்தைப் பகிஷ்கரித்து பாராளுமன்றத்தில் இருந்து வெளிநடப்புச்செய்த தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று சபைக்கு சமுகமளித்திருந்தனர்.

திருக்கோயில் காஞ்சிரங்குடா மற்றும்திருகோணமலை படுகொலைச் சம்பவங்கள் தொடர்பாக சபை ஒத்திவைப்பு வேளையில், ஜே. வி. பி. மற்றும்பொதுஜன ஐக்கிய முன்னணி ஆகியவற்றினால் கொண்டுவரப்பட்ட பிரேரணை மீது உரையாற்ற போதிய சந்தர்ப்பம் தமக்கு வழங்கப்படவில்லை என்பதைக் கண்டித்தேநேற்று முன் தினம் இவர்கள் வெளிநடப்புச் செய்திருந்தனர்.

இவ்வாறான சம்பவங்கள் இனிமேல் இடம்பெறாமல் இருப்பதை அனைவரும்உறுதி செய்யவேண்டும் என கூட்டமைப்பினர் விரும்புவதாக ஜி. ஜி. கஜேந்திர குமார் எம். பி. இது குறித்து சுட்டிக் காட்டியுள்ளார். (உ-10)

---

## முதலாவது மாநாடு

(யாழ்ப்பாணம்)

ஜீவ ஒளி சிறுவர் கழக முதலாவது மாநாடு எதிர்வரும் 26.27ஆம் திகதிகளில் மூறு கண்டியிலுள்ள தென்னிந்திய திருச்சபை வளாகத்தில்வண. ரி. எஸ். யோசுவா தலைமையில் நடைபெறவுள்ளது. (உ-3)

## மீன் சந்தையைத் தடைசெய்க

(சுதுமலை)

ஆனைக் கோட்டைச் சந்தியில் மாலை நேரத்தில்இயங்கி வரும் தற்காலிக மீன் சந்தையை தடைசெய்யக்கோரி இப்பகுதிப் பொதுமக்கள் வர்த்தகர்கள் இணைந்து மகஜர் ஒன்றை வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபைத் தலைவரிற்கு அனுப்பி வைத்துள்ளனர். (உ-252)

## இரத்தத்திற்குத் தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலைஇரத்தவங்கியில் எல்லா வகையான இரத்தத்திற்கும் தட்டுப்பாடுஏற்பட்டுள்ளதாக இரத்தவங்கி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இத்தட்டுப்பாட்டை நிவர்த்திசெய்யஇரத்ததானம் செய்யவிரும்புவோரைஇரத்த வங்கியுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (உ-5)

## தும்புப் பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

தொழிற் திணைக்களத்திற்குச் சொந்தமான சுன்னாகம் அரசினர் தும்பு பயிற்சி நிலையத்திற்கு பயிற்சியாளர்களைசேர்த்துக்கொள்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

வேலைவாய்ப்பற்ற 25 வயதிற்குட்பட்டஇளைஞர், யுவதிகள் இதற்கு விண்ணப்பிக்க முடியும்.

இதற்கான விண்ணப்பங்களை, தும்பு போதனாசிரியர், அரசினர் தும்புப்பயிற்சிநிலையம், சுன்னாகம் என்ற முகவரிக்கோ அல்லது பிரதேச செயலாளர், பிரதேச செயலகம், உடுவில் என்ற முகவரிக்கோ நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோஅனுப்பி வைக்குமாறு தொழில் துறை மாவட்டஅலுவலர்ப.ராகவன் கேட்டுள்ளார். (உ-5)

## உடுப்புப் பொதி கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த 21 ஆம் திகதி முகமாலை சோதனைச் சாவடியில் கண்டெடுக்கப்பட்ட குழந்தைகளின் உடுப்புப் பொதி ஒன்று யாழ் வேம்படி மகளிர் கல்லூரிக்கு முன் உள்ள யாழ். மெடிக்கல் சென்ரரில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர் ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளலாம். (உ)

# கருத்து வேறுபாடுள்ள திருக்குறள் உரைகளை ஆராய்ந்து நல்லுரை காண விழைந்த எல்லீசர்

**டாக்டர்.ரா.பி.சேதுப்பிள்ளை**

ஆங்கில நாட்டில் தோன்றினார் எல்லீசர் என்னும் நல்லறிஞர். இந்தியத் துரைத்தனத்திற்குரிய கலைகளைக் கற்றுத் தேறினார். அவர் சிறந்த மதி நலம் வாய்ந்தவர்,எப்பொருளையும் ஆராய்ந்து மெய்ப்பொருள் காணும் மேதை. அரசியலார் அவரைச் சென்னை நிலவரிமன்றத்தின் (**Board of Revenue**) செயலாளராகமுதலில் நியமித்தனர். எட்டாணடுகள் அவர் அம்மன்றத்திற் சிறந்த பணிபுரிந்தார். அக்காலத்தில் தெனனாட்டுக் காணியாட்சி(**Land Tenure**) முறைகளைக் கற்றார். காணியாளருடைய கடமையையும் உரிமையையும் தெள்ளத் தெளிய அரசியலாருக்கு உணாத்தினார்.

மிராசு முறையைக் குறித்து அவர் எழுதிய நூல் இன்றும் ஆதாரமாகக் கொள்ளப்படுகிறது.

### இந்திய மொழி கற்றல்

பின்னர் பத்தாண்டுகள் எல்லீசர் சென்னைக் கலக்டராய் இருந்தார். அப்போது இந்திய நாட்டு மொழிகளைக் கற்றுணர ஆசைப்பட்டார்.நல்லாசிரியர்களின் உதவி பெற்று வடமொழியும் தென்மொழியும் வருந்திக் கற்றார். தென்னாட்டில் வழங்கும் மொழிகளுள் தமிழ்மொழியின் செம்மையும் தொன்மையும் அவர் உள்ளத்தைக் கவர்ந்தன. சென்னையில் சிறந்த தமிழ்ப் புலவர்களாய் விளங்கிய சாமிநாத பிள்ளை, இராமச்சந்திரக் கவிராயர் முதலியோருடன் ஏட்டுச் சுவடிகளில் அமைந்த தமிழ் நூல்களை அவர் நாள்தோறும் மெய்வருத்தம் பாராது கற்றார்.பழந்தமிழின் பண்புகளைப் பளிங்குபோலக் காட்டும் திருக்குறளை மேல் நாட்டாரும் அறிந்து போற்ற வேண்டும் என்பது அவருடைய ஆசை. அந்நோக்கத்தைக் கொண்டு திருக்குறளுக்கு ஆங்கிலத்தில் அவர் விளக்கமான விரிவுரையொன்று எழுதத்தொடங்கினார்.ஆனால் அப்பணி முற்றுப்பெறாது போயிற்று. .அடியும் முடிவுமின்றி அதுஅரைகுறையாக அச்சிடப்பட்டிருக்கிறது.அந்நூல் ஒன்றே எல்லீசரது தமிழ்ப்புலமைக்கு அழியாத நினைவுச்சின்னமாய் நிலவுகின்றது.

தமிழ்மொழியில் உள்ள நூல்களில் தலைசிறந்தது திருக்குறள்.அந்நூலைப்பொது மறை என்றும் தமிழ்மறை என்றும் தமிழ் மக்கள் போற்றுவார்கள்.தென்னாட்டில் எழுந்த திருக்குறள் எந்நாட்டவர்க்கும், எக்காலத்தவர்க்கும், எச்சமயத்தவர்க்கும் பொது நூலாய் இலங்குகின்றது. அந்நூலின் அருமை அறிந்து,பழங்காலத்தில் சங்கப் புலவர்கள் பாமாலை சூட்டினார்கள். சான்றோர்கள் அந்நூலைச் சான்றாக எடுத்துக் காட்டினார்கள்.

### திருக்குறள் ,தொல்காப்பியம் கற்றல்

ஓதற்கு எளிதாய்,உணர்தற்கு அரிதாய் உள்ள திருக்குறளை விளக்குவதற்கு உரைகள் பல எழுந்தன. உரை செய்தவர்கள் ஒரு காலத்தவரல்லர்.ஒரு சமயத்தவரல்லர் .ஒரு கொள்கையினரல்லர். முன்னாளில் பத்துப்புலவர்கள் அந்நூலுக்கு உரை இயற்றினார்கள் என்று ஒருபழம் பாட்டுக் கூறுகிறது. இந்நாளில் மேலை நாட்டு அறிஞர்களும் திருக்குறளின் பெருமை அறிந்து போற்றுகிறார்கள்.அவர்கட்கு வழிகாட்டியவர் இத்தாலி தேசத்திலிருந்து தமிழ் நாட்டிற் போந்து இயேசு மதசேவைசெய்த வீரமா முனிவர். ஆங்கில நாட்டு அறிஞர் அவரைப் பின்பற்றினர்.

சென்னை மாகாணத்தில் அரசாங்க சேவை செய்வதற்காக வந்தஆங்கில நாட்டு அறிஞர்களுள் சிலர் தமிழ் மொழியை விரும்பிக் கற்றனர். அதன் அருமை பெருமைகளைஅறிந்து போற்றினர்.அன்னவருள்ஒருவர் எல்லீஸ் என்பவர்.**FIRANCTS WHYTE ELLIS**என்பதுஅவரது முழுப் பெயர். அவர் சென்னையில் சேவை செய்ய வந்தார்.அப்போது அவர் இருபது வயதுக்கு உட்பட்ட இளைஞர். பொறுப்புள்ள அரசாங்க வேலையில் ஈடுபட்டிருந்த போதிலும்,எல்லீசரது விருப்பம் பாரத நாட்டு மொழிகளிலும் கலைகளிலும் கவிந்தது. வடமொழியாகிய ஆரியத்தையும் தென்மொழியாகிய திராவிடத்தையும் அவர் கருத்தூன்றிக்கற்றார்.திராவிட மொழிகளுள் தலைமை சான்ற 'தேமதுரத்தமிழ்' அவர் செவியையும், சிந்தையையும் கவர்ந்தது.அந்நாளில் தமிழ் நூல்கள் அச்சிடப்படவில்லை. ஏட்டுச் சுவடிகளில் அடங்கியிருந்தன. ஆயினும் தமிழறிந்த தக்காரைத் துணைக் கொண்டு வேலையொழிந்த நேரத்தில் தொல்காப்பியம் முதலிய இலக்கண நூல்களையும் திருக்குறள் முதலிய சிறந்த இலக்கிய நூல்களையும் மெய்வருத்தம் பாராது அவர் ஓதியுணர்ந்தார். அவருடன் இருந்து தமிழ்க்கல்விக்கு துணை புரிந்தவர்களுள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர்கள், இராமச்சந்திரக் கவிராயரும வித்துவான் சாமிநாதபிள்ளையுமாவார்கள்.இவ்விருவரும் செய்த நன்றியைப் பாட்டாலும் உரையாலும் பாராட்டியுள்ளார் எல்லீசர்.

### சென்னைக் கல்விச் சங்கம்

அக்காலத்தில் நாட்டு மொழிகளைப் பேணிப்பாதுகாப்பதற்காக ஒரு கல்விச்சங்கத்தைச் சென்ன்ன அரசாங்கம் அமைத்தது. **The College of fort St.George** என்னும் பெயரால் அமைத்த அச்சங்கத்தில், பொறுப்புள்ள உறுபபினராய் எல்லீசர் அமர்ந்து பணி செய்தார்.நல்ல தமிழ் நூல்களைத் தொகுப்பதற்கும், அவற்றைப் படிப்பதற்கும் சென்னைக் கல்விச் சங்கம் அவர்க்கு சிறந்த சாதனமாயிற்று.அச்சங்கம் வாயிலாக அவர் செய்த சேவையை அறிந்தோர் அவரை வாயாரப் புகழ்ந்துரைத்தனர்''கொழு கொம்பில்லாது அலை கொடி போலும், கொழுநன் இல்லாக் குலக்கொடி போலும்''ஆதாரமின்றித் தேய்ந்து கிடந்த ஆரியம் தெலுங்கு, மலையாளம் முதலிய இத்தேச பாஷைகளில் தேர்ந்து தமிழ்க் கல்விச் சங்கம் நாட்டுதற்கு வேண்டும் முயற்சி செய்து அமைத்து அப்பல்கலைச் சங்கத்தைப் பாண்டியனைப் போலப் பாதுகாத்தார்எல்லீச்துரை'' என்பது ஒருவர் பாராட்டுரை.

இவ்வாறு தமிழ் நலம் பேணிய எல்லீசர் ,திருவள்ளுவர் இயற்றிய திருக்குறளைத் தலைக்கொண்டுபோற்றினார். தமிழகத்தின்செம்மைக்கும்,சீர்மைக்கும்சிறந்த சான்றாய் நின்றிலங்கும் முப்பாலாகிய திருக்குறள் எப்பாலவரும் இசைந்து ஏற்றுக் கொள்ளத்தக்க உலகப்பொது நூல் என்று கருதினார். ஆங்கில மொழி வாயிலாக அதன் செம்மையை மேலை நாட்டவர்க்கும் காட்ட ஆசைப்பட்டார்.ஆழமும் அழகும் வாய்ந்த திருக்குறளின் கருத்துக்களைப் பிறநாட்டார் உள்ளவாறு உணர்ந்து கொள்ள வேண்டுமாயின் அந்நூலை மொழிபெயர்த்தல் மட்டும் போதாது.விளக்கமான உரையொன்றும் இன்றியமையாதது என்று எண்ணி ஆங்கிலத்தில் ஒரு விரிவுரை எழுதினார்.

### திருக்குறள் உரை

எல்லீசர் இயற்றிய திருக்குறளுரை ஆங்கில அறிவாளர்க்கு ஒரு நல்விருந்து.தமிழ்க் கலைவாணர்க்கு ஒரு களஞ்சியம். அவ்வுரையில் எடுத்தாளப்படுகின்ற நூல்களே,அவருடைய கல்விப் பெருக்கத்தையும் கலையின் விளக்கத்தையும் எடுத்துக் காட்டும்.சங்க நூல்களும்,சமய நூல்களும்,காவியங்களும், புராணங்களும் அவருரையிலே கலந்து இலங்கக் காணலாம் சங்க இலக்கியங்கள் என்று புலவர்கள் பாராட்டும் திருமுருகாற்றுப் படையும்,புறநானூறும் அதில் எடுத்தாளப்படுகின்றன. நீதிநூல்களாகிய நாலடியாரும், பழமொழியும் அருள்நூல்களாகிய திருவாசகமும், திருவாய்மொழியும் ஆங்காங்கு அமைந்து அழகு செய்கின்றன. சிந்தாமணி முதலிய சிறந்த காவியங்களும் பெரிய புராணம் முதலிய அரிய புராணங்களும் காட்சி தருகின்றன. வேதாந்த நூல்களாகிய பகவத் கீதையும், ஞானவாசிட்டமும், சித்தாந்த நூல்களாகிய திருமந்திரமும் திருவருட்பயனும் ஏற்ற இடங்களில் அமைந்து இலங்குகின்றன.இன்னும் கிறிஸ்தவர் போற்றும் பைபிள் என்னும் வேத நூலின் கீதங்களும், வீரமாமுனிவர் இயற்றிய தேம்பாவணிப்பாடல்களும் விளக்கந் தருகின்றன. மேலை நாட்டு அறிவாளர்களாகிய சிசரோவின் செம்மொழிகளும், அரிஸ்டாட்டலின் அரிய மொழிகளும் அழகுற மிளிர்கின்றன.

இவ்வாறு எல்லீசர் வள முற இயற்றிய உரையின் செம்மையைச் சிறிது பார்ப்போம். திருக்குறளின் முதல் அதிகாரமாய் விளங்குவது கடவுள் வாழ்த்து என்பது. எல்லாச் சமயங்களுக்கும் பொதுவான இறைவனது தன்மையைப் பத்துக்குறள்களால் விளங்குகின்றார் திருவள்ளுவர் ஆதிபகவன் என்று முதற்குறளிலே இறைவனைக் குறிக்கின்றார். பகவன் என்னும் சொல் பல சமயத்தாரும் வழிபடும் பரம் பொருளைக் குறிக்கும்'' பகவனே ஈசன், மாயோன், பங்கையன் சிவனை, புத்தன என்று பகர்ந்தது பண்டைய நிகண்டு எனவே சிவனை வணங்கும் சைவருக்கும் திருமாலைச் சேவிக்கும் வைணவர்க கும அருகனை வழிபடும். சமணருக்கும் புத்தனைப் போற்றும் சாக்கியர்க்கும் பிற பெயர்களால் பரம்பொருளை வணங்கும் பிற சமய வாதிகளுக்கும் பொதுவாய் அமைந்தது திருக்குறளில் உள்ள கடவுள் வாழ்த்து என்பது தெளிவாய்த் தெரிகின்றது.

### அறவாழி அந்தணா

ஆயினும் சமயவாதிகள் தத்தம் சமயக் கொள்கைக்கு ஏற்றவாறு உரைஎழுதினார்கள். அதனால கருத்து வேற்றுமை உண்டாயிற்று. இவ்வாறு வேறு பட்ட கருத்துக்களையெல்லாம் எல்லீசர் நன்கு ஆராய்ந்து நல்லுரை காண முயன்றார். அவருடைய உரை நலத்தை இப்போது காணலாம்.

''அறவாழி அந்தணன் தாள் சேர்ந்தார்க் கல்லால் பிற வாழி நீந்தல் அரிது''

என்ற குறளுக்குப் பலர் பல வகையாகப் பொருள் கூறிப்போநதனர் இந்தக் குறளில் அறவாழி அந்தணன் என்பது கடவுளைக் குறிக்கின்றது. அந்தணன் என்ற சொல்லுக்கு அருளுடையவன் கருணையுடையவன் என்பது பொருள அறவாழி அந்தணன் என்பது அருகதேவனுக்கே பொருந்தும் என்பது சமணர் கொள்கை. அன்னார் கொள்கைப்படி அறவாழி என்பது தருமசக்கரம். தருமசக்கரந்தையுடையவன் அருகன் இதற்குச சான்றாகச் சிந்தாமணி என்னும் பெருங்காவியத்தையும் சூடாமணி என்னும் நிகண்டையும் எடுத்துக் காட்டுவர் சமணப் புலவர்கள். அறவாழி அண்ணல் என்று அருகதேவனைக் குறிக்கின்றது சிந்தாமணி அறவாழி வேந்தன் என்பது அருகனுக்குரிய பெயர்களுள்ஒன்று என்று சூடாமணி கூறுகின்றது.எனவே தமிழ் இலக்கிய மரபிற்கு ஏற்ப அறவாழி அந்தணன் என்றசொல்லுக்கு அருகன் என்றே பொருள் கொள்ளுதல் வேண்டும் என்பர் சமணர்.

இந்தப் பொருளைத் திருக்குறளுக்குச் சிறந்த உரை எழுதிய பரிமேலழகர் ஏற்றுக் கொள்ளவில்லை. அறவாழி என்பதற்குத் தரும சக்கரம் என்ற பொருள் பொருந்தாது என்பது அவர் கருத்து. ஆழி என்பது கடல் அற வாழி என்பது அறக்கடல் அல்லது தருமம், சமுத்திரம் என்று பொருள்படும். இறைவன் அறங்கள் எல்லாவற்றையும் தனக்கு வடிவாகவுடையவன ஆதலால் திருவள்ளுவர் இறைவனை அறவாழி அந்தணன் என்றார் என்பது பரிமேலழகர் கொள்கை.

இவ் விரண்டு கொள்கைகளையும் நன்றாக விளக்குகின்றார் எல்லீசர். அவருக்குக்கிடைத்த உரைகள் மூன்று. பரிமேலழகர் உரை ஒன்று. கவிராஜ பண்டிதர் என்ற சமணர் உரை ஒன்று. வீரமாமுனிவர் உரை ஒன்று முனிவர் உரையை **latin comm entqry** என்று எல்லீசர் குறிப்பிடுகின்றார். அறவாழி அந்தணன் என்பதற்கு பரிமேலழகர் சொல்லும் பொருள் சிறந்ததோ. அன்றிச் சமணர் சொல்லும் பொருள் சிறந்ததோ என்ற தொல்லையான ஆராய்ச்சியில் எல்லீசர் ஈடுபடவில்லை. இருதிறத்தார் கருத்தையும் எடுத்துரைத்து மேற் செல்கின்றார்.

அந்தக் குறளிலே பிறவாழி என்ற சொல்லும் வருகின்றது. ''பிறவாழி நீந்தல் அரிது'' என்ற திருக்குறளடியில்

''பிறவாழி'' என்பதற்குப் பொருள் யாது? இதிலும் கருத்து வேறுபாடு உண்டு. பிறவியாகிய கடலே பிறவாழி என்னும் சொல்லாற் குறிக்கப்பட்டது என்பது சமணப புலவர் கருத்து. எனவே பிறவியாகிய கடலைக் கடந்து கரையேறுவதற்கு அருகனுடைய திருவடிவத் துணை இன்றியமையாதது என்று

பரிமேலழகர் இதற்கு வேறு வகையாகப் பொருள் கூறுகின்றார். அறம்,பொருள்,இன்பம் எனப்படும்மூன்றினுள் அறக்கடல் அறவாழியென்று முன்னே கூறப்பட்டமையால் ஏனைய பொருட்கடலும் இன்பக் கடலும் பிறவாழி என்னும் சொல்லால் குறிக்கப் பட்டன என்பது பரிமேலழகர் கருத்து அறக்கடலாகிய இறைவனுடைய திருவடியைச் சேர்ந்தாலன்றி பொருட் கடலையும் இன்பக் கடலையும் கடக்க முடியாது என்பது அவர் கொள்கை

### பிறவாழி என்பது பாவக்கடல்

இந்த உரைகளை ஆராய்ந்தார் எல்லீசர். பிறவாழி என்ற சொல்லுக்கு வேறு ஒரு பொருள் கண்டார் அவர் அறவாழிக்குமாறானது பிறவாழி. அறவாழி என்பது அறக்கடல் என்றால் பிறவாழி என்பது பாவக்கடல் எனவே அறமே உருவாயுள்ள இறைவன் திருவடியே பாவக்கடலைக் கடப்பதற்கு ஏற்ற சாதனம் என்று பொருள் உரைத்தார் எல்லீசர். ஆங்கிலத்தில் அறவாழி என்பதை **sea of virtue** என்றும் பிறவாழி என்பதை, **sea at vice** என்றும் அவர் மொழி பெயர்த்துள்ளார்.

இவ்வாறு எல்லீசர் தமது அறிவால் கண்ட பொருளைப் பழைய உரையாசிரியர்களுள் ஒருவர் கொண்டுள்ளார் என்பது இப்போது தெரிகின்றது. திருக்குறளுக்கு முன்னையோர் இயற்றிய பத்து உரைகளுள் நாடறிந்த பரிமேலழகர் உரையைத் தவிர, பரிதி மணக்குடவர், காளிங்கர் ஆகிய மூவரும் செய்த உரைகள் இக்காலத்தில் கிடைத்துள்ளன. அவற்றைத் தொகுத்து ''திருக்குறள் உரைவளம்'' என்னும் பெயரால் தருமபுர ஆதீனம் வெளியிட்டிருக்கின்றது. அந்த நூலிலுள்ள பரிதியுரை எல்லீசருரையை ஆதரிக்கின் றது .சைவ உரை ஆசிரியராகிய பரிதியார் எழுதியுள்ள உரையைபார்ப்போம். ''தருமம் என்னும சமுத்திரமாகவுள்ள் பரமேசுரன் பாதத்துணையில்லாதார் பாவக் கடலை நீந்த மாட்டார்'' என்ற உரை எல்லீசர் உரையை ஒத்திருககின்றதன்றோ?.

திருவள்ளுவரைப்பற்றித் தமிழ் நாட்டில் வழங்கும் கதைகளையும் மேலை நாட்டார் அறிந்து கொள்ள வேண்டும் என்று ஆசைப் பட்டார் எல்லீசர் இல்லறமே நல்லறம் எனக் கருதிய திருவள்ளுவர், வாசுகி என்ற பெண்ணை மணந்தார் என்றும் அடிசிற்கினியாளாய் அன்புடையாளாய் படிசொல் தவறாத பாவையாய் அவள வாழ்ந்தாள் என்றும் வாழ்க்கைத் துணையாய் அமைந்த அந் நல்லாள் இறந்த பொழுது அவர் வருத்த முற்று ஒரு பாட்டுப் பாடினார் என்றும் கதை கூறுகின்றது. இக் கதையையும் பாட்டையும்''வாழ்க்கைத்துணை நலம்'' என்ற அதிகாரத்திற்கு எழுதிய உரையிலே எடுத்துக் காட்டுகின்றார் எல்லீசர்.

''அடிசிற் கினியாளை ஆக்கம் செய்வாளைப்படிசொற்படி கடவாளை- அடிவருடிப்பின் துஞ்சிமுன்னெழூஉம்பேதையை விட்டையையோ என் துஞ்சும் என்கண்ணிணை!'' என்பது எல்லீசர் எடுத்துக காட்டும் பாட்டு. அவர் கண்ட பாட்டுக்கும் இப்போது நாட்டில் வழங்கும் பாட்டுக்கும் சிறிது வேற்றுமை உண்டு.

### புற நானூறு புகல்வது

இப்படியே புறநானூற்றிலிருந்து அவர் எடுத்து மேற்கோளாகக் காட்டும் செய்யுளிலும் பாட பேதம் காணப்படுகிறது. ''எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு'' என்ற திருக்குறளின் பொருளை விளக்குவதற்கு அவர் எடுத்துக் காட்டும் புறநானூற்றுப் பாட்டிலே.

''குரவர்த் தப்பிய கொடுமையோர்க்கும் வருவாய் மருங்கிற் கழுவாயுமுளவே'' என்ற பாடம் காணப்படுகிறது.ஆனால் இப்போதுள்ள புறநானூற்றுப் பதிப்புகளிலே,

''பார்ப்பார்த் தப்பிய கொடுமையோர்க்கும் வழுவாய் மருங்கிற் கழுவாயுமுளவே'' என்ற அடிகள் காணப்படுகின்றன.

இங்ஙனம் திருக்குறளுக்கு நல்ல விரிவுரையொன்று செய்யத் தலைப்பட்ட எல்லீசர் வாழ்வு நாறபதாம் வயதிலேயே முடிந்து விட்டது. அறுபத்தொன்பது குறளுக்கு அவர் எழுதிய உரை மட்டும் கிடைத்தது. அதைத் தலையும் காலும் இல்லாமல் பெரும்காலமும் போடாமல் முந்நூற்று நான்கு பக்கம் கொண்ட நூலாக யாரோ வெளியிட்டிருக்கின்றார்கள் அதைப் பாதுகாத்து நல்ல முறையில் அச்சிட்டுப் பல்லோரும் அறியப் பரப்புதலே திருவள்ளுவருக்கும் எல்லீசருக்கும் தமிழகம் செய்யத்தக்க சிறந்த- கைம்மாறாகும். இந்நூல் இப்போது சென்னைப் பல்கலைககழகத்தாரால அச்சிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஆணையாளருக்கு எதிரான மனுக்கள் நிராகரிப்பு

(கொழும்பு)

தேர்தல் ஆணையாளருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட 78 மனுக்களையும் நிராகரித்து மேன்முறையீட்டு நீதியரசர் ஷிராணி திலகவர்த்தன தீர்ப்பளித்துள்ளார்.

எனினும் மனுவில் கேட்கப்பட்டவை யாவும் நியாயமானவை எனவே நீதியின்பெயரால் மீண்டும் வாக்குகளை எண்ணும் நடவடிக்கையை தேர்தல் ஆணையாளர் மேற்கொள்ள வேண்டும் எனதெரிவித்துள்ளார்.

அவர் தமது தீர்ப்பில் 'அரச அமைப்பின் 17 வதுசட்டத்தின்படி தேர்தல் ஆணையாளருக்கு ரிட்மனு அனுப்புவதற்குத் தமக்கு அதிகாரம் இல்லை எனவும் அந்த அதிகாரம் உயர்நீதிமன்றத்திற்கே உரியது எனவும் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி, பொதுஜன ஐக்கிய முன்னணி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உட்பட பல அரசியல்கட்சிகள் இம் மனுக்களை தாக்கல்செய்திருந்தன. (உ-3)

சிறுவரை வேலைக்கமர்த்துவதை

## ஒழித்துக் கட்டும் வகையில் செயல் திட்டம் வகுப்பு

(கொழும்பு)

சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவதை ஒழித்துக்கட்டுவது தொடர்பாக இலங்கை அரசு செயல் திட்டம் ஒன்றை வரைவதாக தொழில் வேலை வாய்ப்பு அமைச்சர் மகிந்த சமரசிங்கா தெரிவித்துள்ளார்.

சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தின் உடன்படிக்கைக்கு இலங்கை மதிப்பளிக்கின்றதாகவும் இந்த உடன்படிக்கைக்கு உள்ளூரில் சட்ட அதிகாரம் வழங்குவதற்குநடவடிக்கை எடுக்கப்படும் எனவும்

சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவதை தடுப்பதற்கும் முற்றாக ஒழிப்பதற்கும் தற்போதுள்ள சட்டங்கள் திருத்தப்படும் என்று குறிப்பிட்டார்.

இதேவேளை, 18 வயதிற்கு குறைந்தோர் ஏற்கனவே தொழிலில் ஈடுபடுத்தப்படுகிறார்கள்என்பதற்குசரியான புள்ளி விபரம் கிடையாது என்பதையும் அமைச்சர் சுட்டிக் காட்டியுள்ளார்.

சிறுவர் உழைப்பை ஒழித்துக் கட்டுவதற்கானமேற்பார்வைக் குழு இச்செயற்திட்டத்தில் ஏற்கனவே ஈடுபட்டுள்ளது.

இந்நிலையில் தீங்குவிளைவிக்கும் வேலைகள் எவளென இனங்காணும் வகையில் ஒரு துணைக்குழுவும் நியமிக்கப்படும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-10)

கொடிகாமம் பொலிஸ் நிலைய பிரிவில்

## வீடுகள் சேதமடைந்தமை பற்றி 4, 339 விண்ணப்பங்கள் சமர்ப்பிப்பு

(அச்சுவேலி)

கொடிகாமம் பொலிஸ் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதிகளில், இதுவரை சுமார் 4 ஆயிரத்து 339 குடியிருப்பாளர்கள், தமது வீடுகள் சேதமடைந்திருப்பதாக, பொலிஸ் நிலையத்தில் விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ளனர்.

பளை, எழுதுமட்டுவாள், மிருசுவில், கச்சாய், விடத்தற்பளை, இயற்றாலை, வரணி நாவற்காடு, குடமியன், மந்துவில் போன்ற பகுதிகளைச் சேர்ந்த குடியிருப்பாளர்களே, மீளக் குடியமரும் பொருட்டு, தமது விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ளனர்.

மந்துவில் பகுதியில், ஐநூறுக்கு மேற்பட்ட வீடுகள் சேதமடைந்திருப்பதாக, கொடிகாமம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் சேனாதீர தெரிவித்தார்.

யுத்தத்தால் பலத்த சேதத்திற்குள்ளான இப்பகுதியில் மக்களை மீளக் குடியமர அனுமதி வழங்கப்பட்ட போதிலும், அவர்களின் குடியிருப்புக்களை மீளமைக்க இதுவரை நடவடிக்கை எடுக்காமை குறிப்பிடத்தக்கது. (உ-14)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

சாதியத் தீண்டாமைக்கு எதிரான 1966 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 21 ஆம் திகதி எழுச்சியின் 36 வது வருட நினைவுக் கருத்தரங்கு எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப.4.00 மணிக்கு யாழ்ப்பாணம் எழுத்தாளர் ஒன்றியமண்டபத்தில், தாயகம் சஞ்சிகை ஆசிரியர் க.தணிகாசலம் தலைமையில் நடைபெறவுள்ளது.

சமகாலச் 'சமூகச் சூழ்நிலையில் சாதியம்' என்ற விடயத்தில் புதிய ஜனநாயகக் கட்சி பொதுச் செயலாளர் சி.க. செந்திவேல் உரையாற்றவுள்ளார். (உ)

## முன்பள்ளிகள் குறித்து சமூகநலஅமைச்சு ஆராய்வு

(கொழும்பு)

சமூக நலஅமைச்சுநாடுமுழுவதும் இயங்கிவரும் முன்பள்ளிகள் பகல் பராமரிப்பு நிலையங்கள் ஆகியனபற்றி ஆய்வுகள் நடத்திவருகின்றது.

தேசிய சிறுவர் செயலகம் சிறுவர் அபிவிருத்தி திட்டம் கொழும்பு பல்கலைக்கழகம் என்பன இவ்ஆய்விற்கு உதவிவருகின்றதாக தெரிவிக்கப்டுகிறது.

நாடுமுழுவதும் 13ஆயிரத்திற்கு மேற்பட்ட முன்பள்ளி இயங்கிவருவதாக சமூகநல அமைச்சின் செயலாளர் பீ.ஜெயராஜ சிங்கம்தெரிவித்துள்ளார்.

அடுத்தவருடம் ஏப்ரல் மாதம்வரை இவ்ஆய்வுஇடம் பெறவுள்ளது. (உ-10)

## கைத்தொழில் கண்காட்சி; வெற்றிபெற்றோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் அண்மையில் நடத்தப்பட்ட கைத்தொழில் கண்காட்சியில் யாழ்மாவட்டத்தில் இருந்து பங்குபற்றி பணப்பரிசு பெற்றவர்களின் பெயர்கள் வெளியாகியுள்ளன.

எஸ்.பரம்பொருள், பி.ரஞ்சினி, எம்.ஜெயா, எம்.செல்வமலர், கே.கருணாகரன் வீ.திருக்கேதீஸ்வரி, வீ.வதனி ஆகியோரே பரிசுபெற்றவர்களாவர்.

யாழ்மாவட்ட தொழில் துறைத் திணைக்கள அலுவலகத்துடன் தொடர்புகொண்டு பரிசுத்தொகைக்கான காசோலையைப் பெற்றுக் கொள்ளுமாறு இவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-6)

## உள்நாட்டில் இடம் பெயர்ந்த சுமார் 2 லட்சம் பேர் மீள்குடியேற்றம்

(கொழும்பு)

உள்நாட்டில் இடம் பெயர்ந்த மக்களில் இதுவரை 2 லட்சத்திற்கும் அதிகமானோர் மீளக்குடியமர்ந்துள்ளதாக யூ என் எச். சி ஆர். தகவல் வெளியிட்டுள்ளது.

தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான முயற்சிகளில் ஏற்பட்டுள்ள நம்பிக்கையின் விளைவாகவே இவர்கள் தத்தமது இடங்களிற்கு திரும்பியுள்ளதாகவும்,

இவர்களில் சுமார் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் யாழ் மாவட்டத்திலும் ஏனையோர் திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலும் மீளக் குடியமர்ந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தென் இந்தியாவில் இருந்தும் அகதிகள் பலர் நாடு திரும்பவுள்ளனர். அங்குள்ள முகாம்களில் உள்ள அகதிகளை திருப்பி அழைப்பது குறித்து கலந்துரையாடலை நடத்தி வருவதாகவும் யூ.என். எச். சி. ஆர் தெரிவித்துள்ளது. (உ-10)

## 200 ரூபா நாணயத்தாள் புழக்கத்தில்இருந்து நீங்கும்

(கொழும்பு)

200 ரூபா நாணயத்தாளை புழக்கத்தில்இருந்து படிப்படியாக நீக்க, நாணயத்தை அச்சிட்டு வெளியிடும் இலங்கை மத்தியவங்கி நடவடிக்கை எடுத்துவருகிறது.

மேற்படி தாளைமடித்து வைக்கும்போது அதிகளவு சேதம் ஏற்படுவதனாலும் இத்தாள் பொலித்தீன் தன்மையாகக் காணப்படுவதால் மக்கள் இதைப்பெறத் தயக்கம் காட்டுவதனாலுமே பாவனையில்இருந்து நீக்கத் திட்டமிட்டிருப்பதாக மத்திய வங்கியின் நாணயப் பிரிவிற்குப் பொறுப்பான அத்தியட்சகர் சித்திரா அரியரெட்ண தெரிவித்துள்ளார். (உ)

## சான்றிதழை பெறலாம்

தொழில்துறைத் திணைக்களத்தில நெசவுத் தொழில் பயிற்சி பெற்றவர்கள் தமக்குரிய சான்றிதழை கடிதம் மூலமோ, நேரடியாகவோ தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளலாம் என யாழ். மாவட்ட தொழில்துறைத் திணைக்களம்அறிவித்துள்ளது

கடிதம் மூலம் தொடர்பு கொள்பவர்கள் தமது பெயர் மற்றும் நெசவுப் பயிற்சி பெற்ற நிலையம், நெசவுப் பயிற்சிக் காலம் என்பவற்றைக் குறிப்பிட வேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளது. (உ-6)

## குட்டியபுலத்தில் கல்விக் கண்காட்சி நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

குட்டியப்புலம் அ. த. க. பாடசாலையில் நேற்றுகாலை ஆரம்பிக்கப்பட்ட கல்விக்கண்காட்சி இன்றுவரை நீடிக்கப்பட்டுள்ளது.

இக் கண்காட்சியை தெல்லிப்பழை கோட்ட கல்விப் பணிப்பாளர் கா. சந்திரபாலன் ஆரம்பித்துவைத்தார்.

துணுக்காய்வலய பிரதிக்கல்விப்பணிப்பாளர் கா. சிவப்பிரகாசம் இடைநிலைப் பிரிவையும்,

கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி அதிபர் கா.கணபதிப்பிள்ளை கணித: விஞ்ஞானப்பிரிவையும்,

புன்னாலைக்கட்டுவன் அ. த. க. பாடசாலை அதிபர் மணியம் அழகியல், ஆங்கிலப்பிரிவையும் ஆரம்பித்து வைத்தனர். (க-3)

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் வித்தியாசாலையின் பரிசளிப்பு விழா எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பி.ப. 1.30 மணிக்கு பாடசாலை கதிரவேற்பிள்ளை மண்டபத்தில் அதிபர் பு.ஸ்ரீவிக்கினேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.இரவிராஜ் கலந்துகொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக சங்கானைக் கல்விக்கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் சி. செல்லையா, தெல்லிப்பழை கல்விக்கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் கா. சந்திரபாலன், இசை ஆசிரியர் சி.சிவஞானராஜா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (உ-3)

## பெரியவிளான் பாடசாலை படிப்படியாக மீளமைப்பு

(யாழ்ப்பாணம்)

பெரியவிளான் றோ. க. தமிழ்க் லவன் பாடசாலைக்கு கல்வித்திணைக்களத்தின் உதவியுடன் மேலு ஒரு கட்டடம் அமைக்கப்பட்டு வருகிறது.

பாடசாலையில் சேரும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதைஅடுத்து இப்புதியதிட்டம் அமைக்கப்பட்டுவருகிறது.

கடந்தகால இராணுவ நடவடிக்கையால் முற்றாக அழிக்கப்பட்ட இப்பாடசாலை மீள நிர்மாணிக்கப்பட்டு சிறிய கட்டடத்துடன் மட்டுமே இதுவரை இயங்கிவந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-3)

பருத்தித்துறை

## நீதிமன்ற பதிவாளருக்கு கொலைப் பயமுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை நீதிவான் நீதி மன்றப் பதிவாளர் கடந்த செவ்வாயன்று இரவு இனம்தெரியாத நபர்களினால் கொலை அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளார்.

கடமையில் இருந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த வேளை இவரை வழிமறித்த 10ற்கும் உட்பட்ட ஆட்கள் கொண்ட குழு, இவரது அலுவலகக் கடமைகள் மற்றும் முக்கியமான நீதிமன்ற கட்டளைகளை நிறைவேற்றுவது தொடர்பாகவே மரண அச்சுறுத்தலை விடுத்தாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ)

## பிரதமர் அலுவலகத்துக்குபதிலளிக்கும் கடப்பாடு கூட்டுச் செயலணிக்குண்டு

(கொழும்பு)

தாய்லாந்தில் இடம்பெற்ற முதல் சுற்று பேச்சுவார்த்தைகளில் பெற்றுக் கொள்ளப்பட்டவாறு வட-கிழக்கின் புனர்வாழ்வு புனரமைப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக அமையவுள்ள கூட்டு செயலணி பிரதமர் அலுவலகத்துக்கு பதிலளிக்க வேண்டிய கடப்பாடுள்ள அமைப்பாக விளங்கவுள்ளது.

உத்தேச கூட்டுச் செயலணியின் செயற்பாடுகள், கட்டமைப்புகள் எவ்வாறு அமைந்திருக்கும் என்பது குறித்து வெளியாகியுள்ள ஆரம்பத்தகவல்களில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது;

- கூட்டுச் செயலணி அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான இணைப்பாகக் காணப்படும்.
- வடகிழக்கு மக்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவதற்காக இச் செயலணி நெகிழ்ச்சிப் போக்குடன் செயற்படும்.
- நிலக்கண்ணி வெடிகளை அகற்றும் நடவடிக்கைகளை துரிதப்படுத்தலும், இடம்பெயர்ந்தவர்களின் மீள் குடியேற்றத்தை துரிதப்படுத்துவதும் இதன் முக்கிய நோக்கமாகும்.
- அரச பிரதிநிதிகள் மூவர், புலிகள் பிரதிநிதிகள் மூவர் இச்செயலணியில் இடம் பெறுவர்.
- ஒவ்வொரு தரப்பையும் சேர்ந்த ஒரு பிரதிநிதி சமாதானப் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்வர்.
- இச் செயலணியின் ஏற்பாட்டாளராக நோர்வே பங்களிக்கும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

(உ-3)

அன்பகத் தில்லா உயிர்
வாழ்க்கை வன் பார்கண்
வற்றல் மரந்தளிர்த் தற்று

குறள்

# வலம்புரி

## இரத்ததானம்

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு இரத்தம் அவசர தேவையாகவுள்ளதென இரத்த வங்கிப் பொறுப்பதிகாரி அவசர வேண்டுகோள் விடுத்துள்ளார். தானத்தில் சிறந்த தான இரத்ததானம் உயிர்காக்க வல்லது விபத்துக்கள் மற்றும் குறிப்பிட்ட நோய்கள் காரணமாக இரத்தம் தேவைப்படும் போது இரத்த வங்கி அதனை உடனடியாக வழங்கும் போதே குறித்த நோயாளியின் உயிரைப் பாதுகாக்க முடியும். ஆவ்வாறு உடனடியாக இரத்த வங்கி இரத்தத்தை வழங்குவதற்கு இரத்ததானம் அவசியமாகும்.

இரத்தத்தைத் தானமாக வழங்குவதன் மூலம் மனித உயிர்களைப் பாதுகாக்கக் கூடியதாக இருப்பதுடன் இரத்ததானம் செய்பவருக்கும் அது நன்மை பயப்பதாகவுள்ளது.

எனினும் இரத்ததானத்தைச் செய்வதற்கு முன்வருபவர்கள் மிகக் குறைந்த எண்ணிக்கையினரே. இரத்தத்தை வழங்குவது உடல் நலத்தைப் பாதிக்குமென்ற தவறான கருத்தும், மனித உயிரைப்பாதுகாக்கும் இரக்க சிந்தையும் இளைய சமுகத்திடம் குறைந்து வருவதே இதற்கு அடிப்படைக் காரணமாகும்.

எனவே மனித உயிர்களைப் பாதுகாக்கும் மகத்தான பணியை செய்ய இளைஞர்கள் முன்வர வேண்டும்.

இது விடயத்தில் பாடசாலைக்ள், பல்கலைக் கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிலையங்கள் தம்மாலான பங்களிப்பை நிச்சயம் செய்ய முடியும். இரத்தம் அவசர தேவை என்றால் மட்டும் இரத்ததானம் செய்வதென்ற நிலை மாறி, வங்கி நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டு இரத்ததானத்தை ஓர் ஒழுங்குமுறையில் வழங்க மேற்படி அமைப்புகள் முன்வரவேண்டும்.

அத்தோடு, இரத்ததானம் வழங்குவதை வெளிக்கள பொது சுகாதார உத்தியோகத்தர்கள் ஊக்குவிக்க வேண்டும். ஒவ்வொருகிராமங்களிலும் உள்ள சனசமூக நிலையங்கள், பொது அமைப்புகள் இரத்ததானம் வழங்க முன்வருமாயின், இரத்தவங்கியில் பற்றாக்குறை என்ற பேச்சுக்கே இடமிருக்க முடியாது.

எனவே இளைஞர் குழாம்இரத்த தானத்தை வழங்கி பிறர்க்கும் தமக்கும் நன்மையைப் பெற வேண்டும்.

# மகாகுடமுழுக்கை மங்கல மாக்கும் மகிமையான
# மண்டலாபிடேகம் நற்பலன்களை நல்கிடும்

## வெள்ளி நற்சிந்தனை



திருக்கோவில் ஆவர்த்தம், புனராவர்த்தம், அனாவர்த்தம் குடமுழுக்கு எந்த வகையாக நிகழ்ந்தாலும் தொடர்ந்து நாள் தோறும் அபிடேகம், ஆராதனை, அலங்காரம், பூசை நிகழும் அது ஒரு மண்டலம் வரை நடைபெறும். ஒரு மண்டலம் 45 அல்லது 48 நாட்கள் என்பர். இடம் பொருள் ஏவலுக்கு ஏற்ப அரைமண்டலம், கால் மண்டலம் ஆகப் பிரித்து நடைபெறுவது முண்டு.

### மண்டலாபிடேகம்

மண்டலாபிடேகம் பெருஞ் சாந்திக்குச் சாந்தி செய்வது போலாகும். மண்டலத்தைப் பூர்த்தி செய்யும் நாளில் நிகழும் அபிடேக மாதலின்- அது மண்டலாபிடேகம் எனப் பெயர் பெறும்.

பிரதிட்டையின் போது அட்ட பந்தனம் இட்டதில் வரும் குறை குற்றங்கள், ஏனைய தவறுதல்கள் நிகழ்ந்திருப்பினும் அக்குற்றங்களை களைதல காரணமாகவும் மகாகுடமுழுக்குப் பலனை அடைதற் பொருட்டும், திருவருள் சாநித்தியம் வளரும் பொருட்டும், ஊர் தண்ணளி கொள்ளும் பொருட்டும், அனைத்து நலன்களும் பெருகும் காரணமாக மண்டலாபிடகேம்மிகச் சிறப்பாக நிகழ்த்தப்படும்.

பொரும்பாலும் மண்டலாபிடேகம் - சங்காபிடேகமாக நிகழும் சங்கினால்இறைவனுக்கு பால், நீரினால் திருமுழுக்காட்டுவோர் யாகப் பலன் அடைவர். பிறவித்துன்பம் அகல்வர், என்று சங்கின் சிறப்பினைப் புராணங்கள் வியந்து ஓதும்.

சங்காபிடேகம் 108, 1008 என்று இரு பிரிவுகளாக நிகழும் மூலிகைகள், வாசனைத் திரவியங்களுடன் கலந்த நன்னீரைச் சங்குகளில் நிரப்புவர். சந்தனம், குங்குமம், மாவிலை, தருப்பை, மலர் ஆகியவற்றால் சங்கினை அலங்கரிப்பர்.

### யாகசாலை

வேதிகையை நடுவணாகக் கொண்டு யாகமண்டபத்தை முறைப்படி வகுப்பர். வட்டவடிவமான பீடம் அமைப்பர் 16 அல்லது 17 ஆவரண வரிசையில் சங்குகளை அடுக்குவர். வேறு வகையிலும் சங்குகள் அடுக்கும் முறைமை உண்டு.

சங்கு சந்திர சூரியர்களை அதிதேவதையாக் கொண்டது. அடி நடு நுனிப்பாகங்களில் வருணன் பிரஜாபதி கங்கை சரஸ்வதி முதலாய புண்ணிய தீர்த்தங்கள் உறைவது. திருக்கோயில்களில் நிகழும் சர்வவாத்திய ஒலிகளில் சங்குவாத்தியம்தனியானது. ஓங்கார ஒலிக்கு ஒப்பானது.

சங்குகளில் 'வலம்புரி' மிக விசேடமானதும் அரிய துமாகும். சங்குநாத ஒலிக்கு அருவிகாகவும், சீதேவிக்கு மூத்தாள் முன்வரமாட்டாள்.

சிவ. சண்முகவடிவேல்

யாகசாலையில் 12 இராசிளாகப் பிரிப்பர் குண்டங்ளில் சங்குகளை வைப்பர் 8 திக்குகளுக்குப் பிரதான சங்குகள் வைக்கப்படும் நடுவனாக வலம்புரி இடம்புரிச் சங்குகளைச் சிவ சத்தியாகப் பாவனை பண்ணுவர்.

இரு குடங்களில் சுத்த நீர் நிரப்புவர். அவற்றில் கஸ்தூரி பச்சைக் கர்ப்பூரம்விளாமிச்சி வேர் ஏலம்பன்னீர் மஞ்சள் முதலிய திரவியங்கள சேர்ப்பர். சங்கில் மா விலை தர்ப்பை மலர் வைத்து யாக குண்டம் எதிராக வைப்பர்.

### அக்கினிகாரியம்

இறைவனை எழுந்தருளுவித்து யாகப் பூசை நிகழும். 5 அல்லது 9 குண்டங்களில் அக்னி ஹோத்திரம் நிகழும்.

சிவபிரானை நாமங்களால் வழிபடும் முறையை யசுர் வேதத்தில் காணலாம். அது சதருத்ரீயம் எனப்படும். அட்டவித்தியேசுவரர் அவர் பரிவாரங்களாகச் சங்குகளில் மூர்த்திகளின் நாமங்களை உச்சரித்துப் பூசைகள் நிகழும்.

'பேராயிரம்பரவிவானோர் ஏத்தும் பெம்மானை என்பது தேவாரம்.

முறைப்படி பஞ்சாவரண பூசையுடன் மந்திரங்கள் உச்சரித்து தியானித்து ஆவாகனம்பண்ணுவர் மூலமந்திரத்துடன்கும்பத்தில் இறைவனை குப்பிடுவர். நியாசங்களுக்குப் பின்பு அக்கினி காரியம் ஆரம்பமாகும். அக்கினியில் கிரியைகள் ஓமங்கள்நிகழும் அக்கினி தேவமயமாகவும், வித்தையாகவும், மந்திரங்களாகவும் விளங்கும்.

### சங்காபிடேகம்

அக்கினியிலிருந்து பிரதான கும்பத்துடன் நாட்சந்தனம் நிகழும். விசேட திரவிய ஓமத்தின் பின் பூர்ணா குதி கொடுப்பர் அக்கினியில் வழிபட்டமூர்த்தியைக் கும்பத்தில் ஒடுக்குவர். கும்பம் வீதி வலம் வருதல் நிகழும். சங்கு அபிடேகம் நிகழும்.

நோய், துன்பம், பீடை தூர அகலவும் இட்ட சித்திகள் இலகுவில் கைவரப் பெறவும் சங்காபிடேகம் நிகழ்த்துவர். அம்மை அப்பருடைய அருட் பிரசாதத்தால் இம்மை மறுமைப் பேரின்பப் பெருவாழ்வு வாய்க்கப் பெறும் என்னும் நம்பிக்கை எல்லா நலன்களையும் அருளும்.

### நோர்வேயில் நவம்பரில் நடைபெறும்
# இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டில்
# அரசு- புலிகள் பிரதிநிதிகள் கலந்துகொள்வர்

(கொழும்பு)

நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் எதிர்வரும் 25 ஆம் திகதி இடம்பெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டில் அரசு புலிகள் பிரதிநிதிகள் ஒருசேரக் கலந்து கொளவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேற்படி மாநாட்டில் பங்கேற்பதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அங்கு செல்லவுள்ளதாக சமாதானச் செயலகப் பணிப்பாளர் பேர்னாட் குணதிலக ஏற்கனவே அறிவித்து விட்டார்.

இந் நிலையில், விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளும் இம் மாநாட்டில் கலந்து கொள்ள விருப்பதாக அண்மைய தகவல்கள் தெரிவிக்கின்றன.

நோர்வே அரசினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இம் மாநாட்டில் கலந்து கொள்ளும்படி பல்வேறு உதவி வழங்கும் நிறுவனங்களுக்கும் ஏற்கனவே இலங்கைக்கு உதவி வழங்கிவரும் நாடுகளுக்கும் அழைப்பு விடுக்கப் படவிருப்பதாக அதிகாரபூர்வ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

போரினால் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு- கிழக்கை அபிவிருத்தி செய்வது பற்றி இம் மாநாட்டில் ஆராயப்படும் எனவும்,

இதைத் தொடர்ந்துஅடுத்த ஆண்டு முற்பகுதியில் ரோக்கியோவில இடம்பெறும் இவ்வாறானதோர் மாநாடடிலேயே முழு இலங்கையையும் அபிவிருத்தி செய்வதற்கான நிதி சேகரிக்கப்படும் எனவும் சமாதானச் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, வடக்கு- கிழக்கு புனரமைப்பிற்கென உலக வங்கி ஏற்கனவே 43 மில்லியன் அமெரிக்க டொலரை வழங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ)

---

## தினசரி தியானம்

### பெருக்கமும் சுருக்கமும்

எல்லாவகைப் பெருக்கமும்(வளர்ச்சியும்)வாழ்க்கை. சுருக்கம் அனைத்தும் இறப்பு. எல்லாரிடத்தும் அன்பு என்பது பெருக்கம் (வளர்ச்சி). சுயநலம் என்பது சுருக்கம். ஆகவே அன்புதான் வாழ்க்கையின் ஒரே விதி, எவனொருவன் அன்புடையவனாக இருக்கிறானோ அவனே வாழ்கிறான். சுயநலக்காரன் இறந்து விடுகிறான். அன்பு பெருக்குகிறது. சுயநலம் சுருக்குகிறது.

சுவாமி சிவானந்தர்

---

### படையினர் கட்டுப்பாட்டிலுள்ள
# பருத்தித்துறை வீதிகள் விரைவில் திறந்துவிடப்படும்

(மந்திகை)

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி வீதி, சுப்பர்மடம் வீதி ஆகியன விரைவில் மக்கள் பாவனைக்குத் திறந்துவிடப்படலாம்என எதிர்பார்க்கப்படுகிறது.

மேற்படி வீதிப்பகுதியில் அமைந்துள்ள முகாமில் இருந்து தமது ஆயுத தளபாடங்களை படையினர்படிப்படியாக அகற்றிவருவதாகவும் அப்பகுதிமக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, மேற்படி இரு வீதிகளையும் பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி மற்றும் மெதடிஸ்தமகளிர்கல்லூரி மாணவர்கள் மாத்திரம் பாவிக்க அனுமதி வழங்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-23)

## நாளை மின்தடை

(யாழ்ப்பாணம்)

பராமரிப்பு வேலைகள் காரணமாகமருதனார்மடம், இணுவில், தாவடி, சுதுமலை, கொக்குவில், நாச்சிமார் கோவிலடி, கோம்பயன்மணல், ஆனைக்கோட்டை, நவாலி ஆகிய பகுதிகளுக்கு நாளை காலை 9 00 மணி தொடக்கம் பி.ப. 400 மணிவரைமின்சாரம் தடைப்பட்டிருக்கும்எனபிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (உ-3)

# ஜனாதிபதி - பிரதமருக்கும் இடையிலான முரண்பாடு சமாதானத்தை பாதிக்காது

## நோர்வே அமைச்சர் ஹெல்கீசன் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் இடையிலான கருத்து முரண்பாடுகளோ, அம்பாறை, திருகோணமலை ஆகிய இடங்களில் நடைபெற்ற அசம்பாவிதங்களோ சமாதான முயற்சியை எந்தவகையிலும் பாதிக்கமாட்டாது.

சமாதான முயற்சி நேரான பாதையிலேயே செல்கிறது என்று நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன் நேற்று முன்தினம் இரவு நடத்திய செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

தாய்லாந்தில் இடம்பெறவுள்ள இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தை தொடர்பாக அரச தரப்பினரையும், விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனையும் சந்தித்து உரையாடி விட்டு நோர்வேக்குத் திரும்பும் போது இச் செய்தியாளர் மாநாட்டை அமைச்சர் ஹெல்கீசன் நடத்தியிருந்தார்.

அச் செய்தியாளர் மாநாட்டில் ஹெல்கீசன் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு கிழக்கு புனர்வாழ்வு வேலைகளுக்கு உதவி வழங்கும் நாடுகளுக்கான கூட்டம் ஒன்று நோர்வேயில் நடைபெறவுள்ளது. இதில் இலங்கைக்கு உதவி வழங்குவது தொடர்பாக ஆலோசிக்கப் படவுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தன்னை சந்திக்காதது பெரியதொரு விடயமல்ல. இலங்கைக்கான தனது பயணத்தில் ஏற்பட்ட தாமதத்தினாலேயே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவைச் சந்திக்க முடியாமல் போய் விட்டது என்று அமைச்சர் விடார் ஹெல்கீசன் செய்தியாளர்களின் கேள்விக்கு பதிலளிக்கும் போது கூறினார். (ம)

எனக்கு ஏற்பட்ட நோயிலிருந்து சுகப்படுத்திய இறைவனுக்கும் சகல புனிதர்களுக்கும் நன்றி கூறி நிற்கும் -

இறையடியாள்

[C/5174]

FORUT

FOR SALE

- SCAM 10002
- CCD - TRV 56E
- SONY CAMCORDER

Inspection at FORUT
67, Temple Road, jaffna.

on Monday the 28th & Tuesday,29th 9am to 5pm

[C/5173]

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் முக்கிய அறிவித்தல்

சகல பெற்றார்களும் இன்று அவசர கலந்துரையாடல் ஒன்றுக்கு மிக அவசியமாகவும், அவசரமாகவும் அழைக்கப்படுகின்றீர்கள்

கல்லூரியில் கடந்த 22.10.2002 திகதி தொடக்கம் நடை

### அரசமைக்க....:

உரையாற்றிய முன்னாள் சபாநாயகர் அனுராபண்டார நாயக்கா, பொ.ஐ.மு தேர்தலில் வெற்றிபெறக் கூடிய சூழல் உருவாகியதும் ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைத்துத் தேர்தல்கள் நடத்துவார். இதற்காக அவர் முற்போக்குச் சக்திகள் அனைததையும் அணிதிரட்டுவார். அரசாங்கத்தரப்பு எம்.பிக்கள் பலர் அரசாங்கத்தின் போக்கில் விரக்தி அடைந்துள்ளனர். அவர்கள் உரிய நேரம் வரும்போது எதிர்க் கட்சியுடன் இணைவர். ஜனாதிபதி தனது அதிகாரங்களை பயன்படுத்தும் தருணம் விரைவில் வரும் எனவும் அனுரா தெரிவித்தார்.

கூட்டத்தில் உரையாற்றிய சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன தேர்தல் ஒன்றைச் சந்திக்காமலே பொ.ஐ.மு அரசொன்றை அமைக்கும். ரணில் விக்கிரம்சிங்காவிற்கு பெரும்பான்மை இல்லாது போகுமிடத்து அரசாங்கம் ஒன்றை அமைக்க முன்வருமாறு ஜனாதிபதி எம்மை அழைப்பார் என்று கூறினார். (இ)

UNIVERSITY OF JAFFNA

FACULTY OF GRADUATE STUDIES

COMMENCEMENT - SECOND SEMESTER

POST - GRADUATE DIPLOMA IN PUBLIC ADMINISTRATION

The second Semester of the post - graduate Diploma in public administration will commence on 2002/10/29.

Registrar
University of Jaffna
2002 - 10 - 24

[C/5169]

## வயலுக்குச் சென்ற பெண் மயங்கி விழுந்து மரணம்

(யாழ்ப்பாணம்)

கணவனோடு வயலுக்குச் சென்று கொண்டிருந்த மனைவி, திடிரென மயக்கமுற்று வீழ்ந்து உயிரிழந்த பரிதாப சம்பவம் நேற்றுக் காலை சங்கானையில் இடம் பெற்றது.

சங்கானை பிளேட்ஸ் வீதியைச் சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் தாயான துரைராஜா விஜயரஞ்சினி (வயது38) என்பவரே உயிரிழந்தவராவார்.

வயலுக்குச் சென்று கொண்டிருந்த பிரஸ்தாபக் குடும்பப் பெண் திடீரென மயக்க மடைந்து வீழ்ந்ததாகவும், சங்கானை வைத்தியசாலைக்கு எடுத்து வரும் வழியில் அவர் உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் இடம்பெற்ற மருத்துவ பரிசோதனைக்குப் பின்னர் சடலம் பிரஸ்தாப பெண்ணின் கணவனிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (இ-6)

### இஸ்ரேல்...

நொருங்கிய குளியாப்பிட்டிய தென்னந் தோட்டத்தையும் பார்வையிட்டுள்ளது.

இதனையடுத்து இதற்கான விசாரணைகளை இந் நிபுணர்குழு இன்று ஆரம்பிக்கவுள்ளது. (ம)

### 5 அம்சக்....

விக்கிரமசிங்காவிற்கும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவருமான அமைச்சர் ரவூப் ஹக்கீமிற்கும் அனுப்பப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

தற்போதைய சூழ்நிலை பற்றி ஆராய கட்சியின் அதியுயர் பீடம் கூடவிருந்த போதும் அவ்வாறு கூட முடியாமல் போய் விட்டதாகவும் அமைச்சர் கூறினார். (ந-101)

### வடக்கிற்கும்....

ஆதரவைப்பெறுவது சிரமமானதாக இருக்கும். செயலணிப் பிரிவுகளுக்கான உறுப்பினர்கள் அந்தந்த மாகாணத்தின் விகிதாசார அடிப்படையில் அமைதல் வேண்டும் என்றும் ஹக்கீம் மேலும் தெரிவித்தார். (ந)

### புளொட்....

இக் கொலையின் சந்தேக நபரான பிரஸ்தாப நபரை பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர்ப்படுத்துமாறு நீதிபதி யாழ்.நீதிமன்ற நீதிபதிக்கு அறிவித்திருந்தார்.

இதன் பிரகாரமே நேற்று ஜெயச்சந்திரன் மன்றில் ஆஜராகியிருந்தார்.

இதேவேளை பிரஸ்தாப நபருக்கு ஏற்கனவே வவுனியா நீதிமன்றம் பிணையாணை வழங்கியிருக்கின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (இ-23)

## 13 மீனவர்களை காணவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டு கடற்பிரதேசத்தில் மீன் பிடிப்பதற்கு சென்ற மீனவர்களில் 13 மீனவர்களை காணவில்லை என இராணுவத்தினர் அறிவித்துள்ளனர்.

இம் மீனவர்கள் கடந்த திங்கட் கிழமை காலை மீன் பிடிக்க சென்றவர்கள் கரை திரும்பவில்லை என இராணுவத்தினர் மேலும் தெரிவித்துள்ளனர்.

காணாமல் போன மீனவர்களை தேடிக்கண்டு பிடிப்பதில் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளன்ர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ம)

### பரீட்சை ....

உயர்தர பெண்கள் பாடசாலையின் மண்டபம் 2 வைத்தீஸ்வரக் கல்லூரிக்கும், யாழ்.இந்து மகளிர் கல்லூரி கொக்குவில் இந்து கல்லூரிக்கும் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. (த)

### தேசிய ...

கேள்வி எழுப்பினார்.

#### ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்க என்னுடன் ஒத்துழையுங்கள்

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறை நாட்டு மக்களுக்கு உகந்ததில்லை. என்று நீங்கள் கருதினால் அந்த ஆட்சி முறையை பூரணமாக ஒழிப்பதற்கு என்னுடன் இணைந்து ஒத்துழைக்க முன்வாருங்கள். இந் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஆட்சி முறையை ஒரு தேர்தல் முறை மாற்றம் மூலமாக இல்லாது ஒழிக்க நான் இணக்கம் தெரிவித்துள்ளேன். இதற்கு சகல அரசியற் கட்சிகளும் ஒத்துழைப்பு வழங்கி செயற்பட வேண்டும்.

தமிழீழ விடுதலைப்புலிகள் சமாதான முயற்சி என்று கூறிக் கொண்டு தனியான நீதி, நிர்வாக அலகுகளை நடத்தி வருகின்றார்கள். சமாதான முயற்சிகளில் இருதரப்பினரும் புரிந்துணர்வு உடன்படிக்கையை அமுல் படுத்துவதற்கு அக்கறை காட்டி வருகின்றனர். இது எனக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கின்றது.

நாட்டின் தேசிய நலன் கருதி இரண்டு பெரும்பான்மைக்கட்சிகளும் இணைந்து செயற்பட வேண் டும் இதன் மூலம் தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கும் அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்

தற்போது பாராளுமன்றத்தினை கலைத்து விட்டு புதிய தேர்தல் ஒன்றை நடத்துவதற்கு. நான் ஒரு போதும் உத்தரவிடமாட்டேன். உரிய காலத்தில் பாராளுமன்றம் கலைக்கப்படும் என்றும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மேலும தெரித்துள்ளார். (ம)

The second Semester of the post-graduate Diploma in public administration will commence on 2002/10/29.

Registrar
University of Jaffna
2002 - 10 - 24

[C/5169]

நீதிமன்றில் ஆஜர்ப்படுத்துமாறு நீதிபதி யாழ்.நீதிமன்ற நீதிபதிக்கு அறிவித்திருந்தார்.

இதன் பிரகாரமே நேற்று ஜெயச்சந்திரன் மன்றில் ஆஜராகியிருந்தார்.

இதேவேளை பிரஸ்தாப நபருக்கு ஏற்கனவே வவுனியா நீதிமன்றம் பிணையாணை வழங்கியிருக்கின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (இ-23)

தற்கும் அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்

தற்போது பாராளுமன்றத்தினை கலைத்து விட்டு புதிய தேர்தல் ஒன்றை நடத்துவதற்கு நான் ஒரு போதும் உத்தரவிடமாட்டேன். உரிய காலத்தில் பாராளுமன்றம் கலைக்கப்படும் என்றும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மேலும தெரிவித்துள்ளார். (ம)

## யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் முக்கிய அறிவித்தல்

**சகல பெற்றார்களும் இன்று அவசர கலந்துரையாடல் ஒன்றுக்கு மிக அவசியமாகவும், அவசரமாகவும் அழைக்கப்படுகின்றீர்கள்**

கல்லூரியில் கடந்த 22.10.2002 திகதி தொடக்கம் நடைபெறுகின்ற சில சம்பவங்களை ஒட்டி மிக முக்கியமாக கலந்துரையாடி முடிவு எடுக்க வேண்டியுள்ளதால் தயவு செய்து இன்று (25.10.2002) வெள்ளிக்கிழமை 10.00 மணிக்கு உரிய நேரத்துக்கு வருகை தந்து எமது கல்லூரி மாணவர்களின் கல்வியையும், ஒழுக்கத்தையும் கட்டிக் காப்பதற்கு ஆலோசனை வழங்குமாறு வேண்டுகின்றேன்.

*யாழ் மத்திய கல்லூரி*
*யாழ்ப்பாணம்*

*அதிபர்*

[C/5171]

## இதய அஞ்சலி

வட இலங்கைச் சங்கீத சபையின் நிர்வாக செயலாளராக கடமையாற்றி ஓய்வு பெற்ற

### மாணிக்கம் கந்தப்பு

அவர்களின் மறைவு கேட்டு அதிர்ச்சியடைகின்றோம். அமரரின் ஆத்மா சாந்தி பெற இறைஞ்சுகின்றோம். எமது ஆழ்ந்த அனுதாபங்களை அன்னாரின் குடும்பத்தினருக்கு சமர்ப்பிக்கின்றோம்.

வலயக் கல்வித் திணைக்களம்
யாழ்ப்பாணம்

வட இலங்கை சங்கீதசபை

[C/5170]


# தணிஸ் ரெக்ஸ்

தீபாவளித் திருநாளை முன்னிட்டு இறக்குமதி செய்யப்பட்ட சாறி வகைகளான;



பாபா, மின்னலே, யூத், காதல் அழிவதில்லை, ஏழுமலை, ஏய் நீ ரொம்ப அழகாய் இருக்கே, நந்தா, காசி, அசோகா இவற்றுடன் பலரக சாறிகள், T. சேட், சேட் சூட் வகைகள், ரெடிமேட் ஸ்கேட், பிளவுஸ், ஸ்கேட் அன் பிளவுஸ், கவுண், ரெனிம் ஸ்கேட், ரெனிம்ஸ்கேட் அன் பிளவுஸ் என்பவற்றை நியாய விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

குறிப்பு:- பிளவுஸ்பீஸ் மற்றும் ப்ளேன் துணி, பிறின் துணிகளுக்கென பிரத்தியேக காட்சியறை (மேல்மாடி) அமைக்கப்பட்டுள்ளது.



## தணிஸ் ரெக்ஸ்

நவாலி றோட் ஆனைக்கோட்டை

[C/5168]



இப்பபத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.10.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.